REGD M. 4642.

# திராவிடநாடு

நா விபரம்
—
ஆண்டு ரூ 7,
„ 3 8 0

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 13 சதம்    மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 26—6—49 | இதழ் 52

## ★ நான் கண்ட அழகர்சாமி ★

தொடர்ச்சி—9

எஸ். வி. லிங்கம்

திராவிடர்க்கழகத்திற்கு, மாகாண அரசாங்கம் பற்றியோ, மத்திய அரசாங்கம் பற்றியோ, அல்லது இவைகளுக்கிடையேயுள்ள உறவு முறைகள் பற்றியோ, ஏதும் தெரியாது என்பதும், மாகாண அரசாங்கத்தின் திறமையாலும், மந்திரிகளின் செல்வாக்கின் வன்மையாலும் என்னென்ன செயல்கள் செய்ய முடியும் என்பதை உணராதவர்கள் திராவிடர்க் கழகத்தார் என்பதும், இன்றைய எதிர்க் கட்சித் தலைவர்களின் எண்ணமாகும். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே, இதைக் கட்சி உணர்ந்திருக்கிறது என்பது, இன்றைய தேசியத் தலைவர்களுக்குத் தெரிய நியாயமில்லை.

டாக்டர் சுப்பராயன் அவர்கள் முதன் மந்திரியாக இருந்தார். அப்பொழுது தோழர் ஏ. டி. பன்னீர் செல்வத்தையும், அவரைச் சார்ந்த கூட்டத்தையும் டாக்டர் சுப்பராயனுக்குப் பிடிக்காது. ஆனால் பெரியாரிடம் இரண்டு பேரும் பெருமதிப்பு வைத்திருந்தார்கள். அப்படியிருந்தாலும், இருவரும் தங்களுக்குள் பகைத்துக்கொண்டு, ஒருவரையொருவர் வீழ்த்தும் செயலில் இறங்குவதில் சிறிதும் விட்டுக் கொடுப்பதில்லை. இத்தகைய சந்தர்ப்பங்களில், தலைவர், சுப்பராயன், செல்வம் இந்த மூவருக்கும் நல்லவராக நடந்துகொண்டு, அதே சமயத்தில், கட்சி வளர்ச்சியிலும் கருத்தூன்றி இருப்பது ஒருவருக்கு மிகக் கடினமான வேலையாகும். இந்த மாதிரிக் கட்டங்கள் நமது கட்சிக்கு எத்துணையோ முறை வாய்த்திருக்கின்றன. இத்தகைய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டால், அழகர்சாமி மனக்கஷ்டமடைந்து சோர்ந்து போவது கிடையாது; மாறாக, வெகு குஷியாக வேலை செய்யத் தொடங்குவார்.

ஜில்லாபோர்டு தேர்தல் நடக்கும்போது, தேர்தலுக்கு முதல் மாதம், பதினைந்துஅங்கத்தினர்களை, மந்திரிகள் நியமனம் செய்வது அப்போதைய பழக்கம். ஒரு சமயம், தேர்தல் நடைபெறுவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே, அழகர்சாமி இது சம்பந்தமாகத் தன் மனதுக்குள் திட்டமிட்டுக் கொண்டார். அப்பொழுது, பெரியார், தஞ்சை ஜில்லா சுற்றுப் பிரயாணத்திற்கு அழைக்கப்பட்டு அம்மாவட்டத்தில் ஒரு வாரம் சுற்றுப்பிரயாணம் செய்தார். அடுத்தவாரம், ஈரோட்டில், மாயவரம் நடராசன், நாகை மணி ஆகிய இவர்கள் பெரியாரிடம், கீழ்க்கண்ட கனவான்கள் ஜில்லா போர்டுக்கு நாமினேஷன் செய்யப்பட்டால், சுயமரியாதை இயக்க வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக இருக்குமென்று சொன்னார்கள். பெரியார், தம்முடைய சுற்றுப்பிரயாண காலத்தில், சற்றேறக் குறைய சிபார்சு செய்யப்பட்ட பெரிய மனிதர்களைப் பார்த்துமிருக்கிறார். ஆதலால், கஷ்டமில்லாமல் இந்தப் பதினைந்து பெயர்களுடைய பெயர்ப் பட்டியல் டாக்டர் சுப்பராயனிடம் சிபார்சு செய்யப்பட்டது. சர்க்கார் கெஜட்டில் பெயர்களும் வந்துவிட்டன. டாக்டர் சுப்பராயன் அவர்களுடைய எண்ணம் என்னவென்றால், இவர்கள் தனக்குத்தான் உதவுவார்கள் என்பதாகும். ஆனால், அழகர்சாமி அவர்கள், தோழர் பன்னீர் செல்வத்தை உடன் அழைத்துக் கொண்டு, ஜில்லாபோர்டுக்கு நாமினேஷன் செய்யப்பட்ட எல்லா அங்கத்தினர்களையும் சந்தித்து, தேர்தலில் பன்னீர் செல்வத்தையே ஆதரிக்க வேண்டுமென்று, அவர்களிடம் வாக்குறுதி வாங்கிக்கொண்டார்.

முதலில் தாலுக்கா போர்டு தேர்தல்கள் நடைபெற்றன. கும்ப

கோணத்தில், கந்தசாமி மூப்பனார் அங்கத்தினராக வந்தால், நிச்சயம் அவர்தான் தாலுக்காபோர்டு தலைவராக வருவார். அப்படி யேற்பட்டால், தாலுக்கா போர்டிலிருந்து ஜில்லா போர்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஐந்து ஜில்லா போர்டு அங்கத்தினர்களும், கந்தசாமி மூப்பனார் ஆட்களாகவே வருவார்கள். இவர்கள் செல்வத்தைத் தான் ஆதரிப்பார்கள். இந்த நிலைமையை அறிந்து, கும்பகோணம் லட்சுமிராகவ அய்யங்கார் மந்திரி கட்சிக்கு விஷயத்தைத் தெரிவித்தார். இதற்குப் பரிகாரம், கந்தசாமி மூப்பனாரின் நாமினேஷன் பாரம் செல்லாது என்று தள்ளிவிட்டால் தான், கும்பகோணத்தின் ஐந்து வோட்டுக்களும், செல்வத்திற்குப் போகாமல் மந்திரியை ஆதரிக்கும் கட்சிக்குக்கிடைக்கும் என்று சொல்லப்பட்டது. சம்பவங்களும் அப்படியே நடந்தன. இதை எதிர்பார்த்த தோழர் அழகர்சாமி, நாகைமணி, மாயவரம் நடராசன் ஆகியவர்களுடன் ஈரோடு சென்று, பின்பு சென்னை சென்று திரும்பினார்.

நாமினேஷனில் தள்ளப்பட்ட கந்தசாமி மூப்பனாரின் பெயர் மீண்டும் சேர்க்கப்பட்டுத் தேர்தல் நடந்தது. மூப்பனார் தோற்றுவிடுவார் என்றே மந்திரிக்கட்சி நம்பிற்று. தேர்தலில் மூப்பனார் வெற்றி பெற்றார். அழகர்சாமியின் கூட்டம், கந்தசாமிமூப்பனாருக்குச் சார்பாகத் தேர்தல் பிரசாரத்திற்குச் செல்லக் கூடாதென்று, மந்திரிக் கட்சியை ஆதரிக்கும் மனிதர்கள் சொன்னார்கள். அப்படியே செயல்களும் நடந்தன. மூப்பனார் வெற்றிபெற, அழகர்சாமியின் பிரசாரம் தேவை இல்லை என்பது தோழர் அழகர்சாமிக்கு நன்றாகத் தெரிந்திருந்தது.

இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலெல்லாம், மந்திரிக்கட்சியாரும், செல்வம் கட்சியாரும், பெரியாரைத் தனித்தனியாகச்சந்தித்துத் தங்களை ஆதரிக்கவேண்டும் என்று கேட்பார்கள். பெரியாருக்குச் சங்கடமான நிலைமை ஏற்படும். இரண்டுகட்சியும் சண்டை போடாமல் ஒத்து இருக்கக் கூடாதா? என்று கவலைப்படுவார். இச்சமயத்தில்தான் மலாய்நாட்டுச் சுற்றுப்பிரயாணம் துவக்கப்பட்டது. பெரியாரும் அவர் சகாக்களும்மலாய் நாடு சென்று திரும்பினார்கள்.

பின்பு ஜில்லாபோர்டு தேர்தல் நடந்தது. தோழர்கள் பி.டி. ராசன், டபிள்யூ. பி. ஏ. சௌந்திரபாண்டியன், கே. ஏ.பி. விசுவநாதம்போன்ற பிரபலஸ்தர்கள் தேர்தலைக் கண்காணிக்க தஞ்சை வந்தார்கள். "ராசா சத்திரத்தில்" தங்கி இருந்தார்கள். மந்திரி சுப்பராயன் கட்சிக்கு எதிராக இருக்கும் கட்சிக்கு ஆதரவு கொடுக்கப் பாண்டியன் வந்திருந்ததால், மந்திரிக்கட்சியின் ஆட்கள் கொஞ்சம் ஆகம்பாவத்துடன் இருந்தார்கள். தேர்தல் நடைபெற்ற அன்று காலையில்,ஸ்டேஷனிலிருந்து பாண்டியன், ராசன் ஆகியவர்கள் மோட்டாரில் வரும்போது, மந்திரிக் கட்சி அடியாட்கள் காரை நிறுத்தி, அவர்களைப்பழித்துக்கூறிப்பரிகாசம் செய்து அனுப்பினார்கள். "ராசாசத்திரத்தில்," அழகர்சாமி, மாயவரம் நடராசன், நாகை மணி, சிதம்பரம் தண்டபாணி ஆகியவர்கள் தங்கியிருந்தார்கள். அவர்களைக்கூப்பிட்டு வழியில் நடந்ததைப்பற்றியெல்லாம், பாண்டியன் அவர்களிடம் கூறினார். அழகர்சாமிக்கு உடனே அடங்காத கோபம் எழுந்தது. பக்கத்தில் நின்ற மாயவரம் நடராசனைத் தன் அகன்ற விழியால் கோபக் கனல் கக்க ஒரு முறை முறைத்துப் பார்த்தார். நடராசனின் முகத்தோற்றம் புறப்படுங்கள் போவோம் என்ற பதிலைத் தந்தது. உடனே சம்பவம் நடந்தஇடத்திற்கு அழகர்சாமியின் அந்தப் பட்டாளம் திரண்டு சென்றது. அங்கு மன்னார்குடியைச் சேர்ந்த பிரபல முஸ்லிம் கனவான் நின்றுகொண்டிருந்தார். அவரை எங்களுக்கு நன்கத்தெரியும். பாண்டியனை வழிமறித்தது யார் என்று கேட்டோம். அந்த முஸ்லிம் கனவானுக்கு நடராசன், அழகர்சாமி ஆகியோரின் பலம் நன்றாகத்தெரியும். ஆதலால் சமாதானமாகவே பதில் சொன்னார். நாங்கள் கிளம்பிச்சென்ற வேகப்படி அவரைத் தாக்கமுடியவில்லை. பின்பு நான் அதிக சம்பந்தப்பட்டேன். அடிதடியாயிற்று. கலகம் செய்த நண்பர்கள் "ராசா சத்திரத்திற்கு" வந்து மன்னிப்புக்கேட்டுக்கொண்டார்கள். மாலை நடந்த ஜில்லாபோர்டு தேர்தலில் பன்னீர்ச்செல்வம் வெற்றிபெற்றார். ஈரோட்டுக்குத்தந்திபோயிற்று.

இரண்டு நாட்கள் சென்ற பிறகு போலீசிலிருந்து எங்களுக்குச் சம்மன் வந்தது. சம்மனை வாங்கிக் கொள்ளவேண்டாம் என்று தோழர் என். ஆர். சாமியப்பா, தோழர் அழகர்சாமியிடம் கூறினார். அழகர்சாமி அதற்குப் பதிலிறுக்கு முகத்தான், "ஐயா! அதுமுடியாது! சம்மனை நாங்கள் பெற்றுக்கொள்வோம். கோர்ட்டில் நாங்கள் செய்ததை ஒப்புக்கொள்வோம். அதனால் வரும் பலனை அனுபவிப்போம். ஆயிரக்கணக்கான மக்கள்முன்பு நாங்கள் செய்ததை, மறுத்துக் கோர்ட்டில் பொய்சொல்ல மாட்டோம். பொது வாழ்க்கையில் இருக்கும் நாங்கள் பொய்யர்கள் என்று பெயர் எடுக்க மாட்டோம்" என்று கூறினார். ஆனால் பின்பு இரண்டுதடவைகள் கோர்ட்டுக்குப்போனோம். பின்பு வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது.

தோழர் ஏ. டி. பன்னீர்செல்வம் ஜில்லா போர்டு தேர்தலில் வெற்றி பெற்ற சில மாதங்களுக்குப் பிறகு, திருப்புவனத்தில், கும்பகோணம் தாலுக்கா மாநாடு ஒன்று நடைபெற்றது. பெரியார் அவர்கள் இதற்குத் தலைமை வகித்தார். இதைக் கூட்ட முயற்சி செய்தவர்கள் தோழர்கள் என். ஆர். சாமிபப்பா, கந்தசாமி மூப்பனார் போன்ற கனவான்கள். முன்பு ஜில்லா போர்டு தேர்தலில், சாமியப்பா — மூப்பனார் கூட்டத்துக்குச் சாதகமாகவும், மந்திரிக் கட்சிக் கூட்டத்துக்குப் பாதகமாகவும் செயலில்நடந்த அழகர்சாமிக்கு, இம்மாநாட்டின்போது, முதலில் நடந்ததற்கு மாறுபட்ட நிலைமையில் நடக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. காரணம், இம்மாநாட்டைக் கூட்டும் கனவான்கள், தோழர் எஸ். முத்தையா அவர்களைத் தோற்கடிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு கூட்டியிருந்தார்கள். தோழர் எஸ். முத்தையா அவர்களிடம், அன்றும் இன்றும், பெரியாருக்கு அளவு கடந்த மதிப்பு உண்டு. எதிர்பாராத விதமாக இம்மாநாட்டில் ஐயா அவர்கள் தலைமை வகிக்க நேர்ந்தது. மாநாட்டில்தான், இம்மாநாட்டின் போக்கு யாவருக்கும் விளங்கியது. மிகவும் நெருக்கடி மிகுந்த சங்கடமான நிலைமையில் பெரியார் இருந்தார். மாநாடும் நடைபெற்றது. அதில், வரப்போகும் சட்டசபைத் தேர்தலில், பன்னீர்செல்வம் அவர்களை இம்மாநாடு ஆதரிக்கிறது என்று ஒரு தீர்மானம் வந்தது. இத்தீர்மானத்திற்கு, ஒரு திருத்தத்தை நான்

கொண்டுபோனேன். அதை நாகைத் தோழர் என். பி. காளியப்பன் ஆதரித்தார். தோழர் பன்னீர்செல்வம் அவர்களையும், வகுப்புவாரிப் பிரதிநிதித்வச் சட்டத்தைத் தைரியமாகக் கொண்டுவந்த தோழர் எஸ். முத்தையா அவர்களையும் சட்டசபைத் தேர்தலில், இம்மாநாடு ஆதரிக்கிறது என்பதே அத்தீர்மானத்தின் கருத்தாகும். கும்பகோணம் தேர்தலில், தோழர் மூப்பனுரின் நாமினேஷனை மீண்டும் ஒப்புக் கொள்ளும்படி செய்தவர் தோழர் எஸ். முத்தையா அவர்கள்தான் என்றும், ஆகவே முத்தையாவை ஆதரிக்கவேண்டியது அவசியம் என்றும் பல காரணங்களைச் சொல்லித் தீர்மானத்தை முன்மொழிந்தேன். மாநாட்டின் தலைவர் என்ற முறையில், பெரியார் அத்திருத்தத்துடன் கூடிய திர்மானத்தை ஓட்டுக்குவிட்டு, ஏகமனதாக நிறைவேறச் செய்தார்.

அன்று பெரியார் ஆற்றிய சொற்பொழிவு காரசாரமான சொற்பொழிவுகளில் ஒன்றாகும். "உங்கள் வீட்டில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் முத்தையா என்று பெயரிடுங்கள்" என்று கூறுவதுவரை பெரியார் அவர்கள் சொற்பொழிவு சென்றது. இப்படிப் பெரியார் எண்ணும் ஆசைகளைப், பெரியார் கருத்துக்கு முரண்பாடாமல், மாறுபாடாமல், தனது திறமையால் அவற்றையெல்லாம் சாதித்துக் கொடுக்கும் கெட்டிக்காரத்தனம் அழகர்சாமிக்கு இயற்கையாகவே உண்டு. முதலில் ஜில்லாபோர்டு தேர்தலில் செல்வத்தை ஆதரித்ததற்காக மந்திரிக் கட்சி தன்மீது இரக்கங்காட்டாமற் போகுமே என்றோ, பின் சட்டசபைத் தேர்தலில் தோழர் எஸ். முத்தையாவைத் தேர்ந்தெடுக்கக் கூடாது என்று எண்ணியுள்ள செல்வம் கட்சிக்கு மாறுபாடாத், தான் முத்தையாவை ஆதரிப்பதற்கா, செல்வம் கட்சி தன்மீது கோபப்படுமென்றோ, அவர் பயந்தது கிடையாது.

சென்னை மாகாணத்தில், தஞ்சை ஜில்லா, "அரசியல் கட்சிகளுக்கு" ஒரு தர்மா மீட்டர் போன்றதாகும். இதுவரையில், மாகாண அரசியலை நடத்திவந்த ஜஸ்டிஸ் கட்சிக்கு இனி வீழ்ச்சி புறுங்காலம்வந்தெய்திவிட்டது என்பது அந்தச் சட்டசபைத்தேர்தலில் தெரிந்தது. பின்பு ஜஸ்டிஸ்கட்சி அந்த ஜில்லாவில் ஆட்சிபுரியவில்லை. ஆனால் தஞ்சை ஜில்லாவின் இருபது ஆண்டுக்காலத்தில், இந்துமத அறநிலையப் பாதுகாப்புப்போர்டின் தலைவராகவும், ஜில்லா போர்டின் தலைவராகவும் இருந்துவந்த இரண்டு வடகலை அய்யங்கார் பிரபுக்கள் ஆட்சியை மாற்றிய பெருமை அனைத்தும் ஜஸ்டிஸ் கட்சியைச் சார்ந்ததாகும். இன்று ஜஸ்டிஸ் கட்சி போர்டைக் கைப்பற்றாவிட்டாலும், மீண்டும் ஜில்லாவின் ஆதிக்கம் அய்யங்கார்கள் வசம் வரமுடியாது என்பது மட்டும் திண்ணம். காலஞ்சென்ற தோழர் ஏ. டி. பன்னீர்செல்வம், அழகர்சாமியிடம் கொண்ட நீங்கா நட்புக்குக் காரணம், அழகர்சாமிக்குக் கட்சியின் வளர்ச்சியிலுள்ள நுணுக்கமான புத்திசாலித்தனம், அரச தந்திரம், திறமை ஆகியவைகளை நன்கு கண்டறிந்து கொண்டதேயாகும்.

(தொடரும்)

4-ம் பக்கத் தொடர்ச்சி

களை ராஜா சர். ராமசாமிமுதலியார் சத்திரத்தில் விட்டு வைத்திருக்கின்றார்கள். இதே நிலையிலுள்ள 170 அகதிகள் ஏற்கெனவே அந்தச் சத்திரத்தில் இருந்துகொண்டிருக்கின்றனர். புதிதாக வந்த 60-அகதிகளுக்கு ஆள் ஒன்றிற்கு ஒரு ரூபாய் வீதம் கொடுத்து அனுப்பியிருக்கின்றனர். நிராதரவாக வந்திருக்கும் அகதி ஒரு ரூபாயை வைத்துக் கொண்டு எத்தனை நாளைக்குச் சாப்பிட முடியும்? 29—3—49-ந் தேதி அனுப்பிவைத்தவர்கள் 30-ந் தேதி காலை 10-மணிவரை வந்து எட்டிப் பார்க்கவேயில்லை. அகதிகளின் கஷ்ட நிவாரண உத்தியோகஸ்தர்கள் இவ் விஷயத்தில் உடனே கவனஞ் செலுத்தல் வேண்டும்.

ஏற்கனவே சத்திரத்திலுள்ள அகதிகளுக்கு வாரத்தில் 4-ரூபாய் கொடுக்கப்படுகிறதாம். 4-ரூபாயைக் கொண்டு ஜீவிக்க முடியுமா? சத்திரத்தில் ஜனநெருக்கம் அதிகமாக இருப்பதால் சுகாதாரம் மிகமிகப் பாழடைந்து விட்டது. தினம் 4, 5 பேர்களுக்கு அம்மை வார்க்கிறது. சுகாதாரத்தையாவது உடனே கவனிக்கவேண்டும், இன்றேல் அகதிகளை வேறு தக்க இடத்திற்காவது மாற்ற வேண்டும். பாகிஸ்தானிலிருந்து வந்திருக்கும் அகதிகளைக் கவனிப்பதைப் போலவாவது பர்மாவிலிருந்து வந்த அகதிகளை கவனிக்க வேண்டாமா? கவனிக்க அரசாங்கம் முற்படுமா?

✲

## சந்திரநாகூர் பேசுகிறது

(16-ம் பக்கம் பார்க்க)

அளித்ததாக, வழிவழிச் செவியுரையால் உணரப்படுகிறது. சுப்பாசிங் என்பான் கிளர்ச்சிபுரிந்த காலமாகிய 1696-1697-ம் ஆண்டில், ஆங்கிலம், பிரெஞ்சு, டச்சு ஆகிய மூன்று வகையினரும் தங்கள் பண்டகசாலைகளைப் பாதுகாப்புப் படைத் தளங்களாக ஆக்கிவைத்துக்கொள்ள அனுமதி பெற்றுக்கொண்டனர். அதன் பேரில், சின்சுரா என்ற இடத்தில் கஸ்டவஸ் கோட்டையும் (டச்சு), சந்திரநாகூரில் ஆர்லியன்ஸ் கோட்டையும் (பிரெஞ்சு), கல்கத்தாவில் வில்லியம் கோட்டையும் (ஆங்கிலம்) எழுப்பப்பட்டன. இவ்விதமாக வங்கத்தில், சந்திரநாகூர், பிரெஞ்சுக்காரர்களின் வாழுமிடமாகவும் — வாணிகக் கூடமாகவும் அமைந்தது.

ஏறத்தாழ இந்த 260 ஆண்டு காலத்தில், இடையில் ஒரு பத்து ஆண்டுகள்தான் அது பெரும் புகழுடன்விளங்கியிருந்திருக்கிறது. இந்தக் குடியேற்ற இடம் 1701-ம் ஆண்டில் தான், பாண்டிச்சேரி கவர்னரின் ஆளுகையின்கீழ் கொண்டுவரப்பட்டது. பல ஆண்டுகள் வரையிலும் பணத் தட்டுப்பாடு மிகுந்திருந்த காரணத்தால், வாணிகம்சிறந்தோங்க வழியேற்படவில்லை. பாரிஸிலுள்ள பிரெஞ்சு ஆட்சியாளரும் உதவி செய்ய முன்வரவில்லை. ஆரம்ப நிலையில், ஒரு சில பிரெஞ்சுக் குடும்பங்கள்தாம், சந்திரநாகூரில் குடியேறியிருந்தன. "வங்காளத்தில் பிரெஞ்சு மக்களின் பிரதான செயலாக இருந்தது, சந்திரநாகூரின் மிகச் சிறிய மாதா கோயிலில் கூடி, வேதவுரை கேட்பதேயாகும்" என்று ஆங்கிலப் பண்டகசாலையைச் சேர்ந்த ஒருவர் பழித்துக் கூறும் முறையில் எழுதியுள்ளார்.

(5-ம் பக்கம் பார்க்க)

# பர்மா விரட்டிய அகதிகள்

[கோ. நா. சுப்பையா]

பர்மாவில் இன்று ஏற்பட்டிருக்கிற உள்நாட்டுக்குழப்பத்தின் காரணமாக, ஜில்லாப் புறங்களில் வசிக்கும் இந்தியர்கள் தங்கள் வீடு வாசல்களையும், இதரப் பொருள்களையும் இழந்து, ரங்கூன் நகரம் வந்து சேர்ந்தவண்ணமாக இருக்கின்றனர். ரங்கூனில் பர்மியரும்—இந்தியரும் கலந்த தலைமை கஷ்டநிவாரண கமிட்டியார், 37 இடங்களில் முகாம்களை அமைத்து, உணவு, உடை முதலியன கொடுத்து வருகின்றனர். பர்மா இந்தியர் காங்கிரஸ் நிர்வாகிகளும் தக்க உதவிகளைச் செய்து வருகிறார்கள். பெரும்பாலான இந்தியர்கள் இந்தியா திரும்ப விரும்புகின்றனர். பர்மாவிலுள்ள இந்திய அரசாங்கத் தூதர் காரியாலயத்தினர் இதுவரை சுமார் 6000 இந்தியரை இந்தியாவுக்கு, இந்திய சர்க்கார் செலவில் அனுப்பியிருக்கின்றனர்.

24—3—49-ந் தேதி ரங்கூனிலிருந்து புறப்பட்ட "ஜலதுர்க்கா" என்ற கப்பலில், 2700 அகதிகளை ஏற்றி அனுப்பினர். அதே கப்பலில் சுயேச்சையாகப் பிரயாணம் செய்யும் 500 பிரயாணிகளும் வந்தார்கள். மொத்தம் 3200 பிரயாணிகள் பிரயாணம் செய்தனர். ஜலதுர்க்காவில் 2200 பேர்தான் டெக் பிரயாணிகள் பிரயாணம் செய்யலாம்; எனினும் இம்முறை 3200 டெக் பிரயாணிகளைக் கப்பல் கம்பெனியார் ஏற்றியதற்கு காரணம் தெரியவில்லை. கப்பல் கம்பெனி பண வருவாயை உத்தேசித்து ஏற்றினாலும், இந்திய தூதுவர் காரியாலயம் அதற்கு இணங்கியதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. ஒவ்வொரு கப்பலிலும் இத்தனை டெக் பிரயாணிகள்தான் பிரயாணம் செய்யலாமென்று விதியிருக்கிறது. பி. ஐ. எஸ். என். கம்பெனி கப்பல்களில் இந்த விதியைக் கட்டாயமாக அனுஷ்டிக்கின்றனர். "ஜலதுர்க்கா"விற்குச் சொந்தக்காரர்களான ஸிந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி அந்த விதியை அனுஷ்டிக்கவில்லை. ஒருக்கால் இந்திய அகதிகளைத் துரிதமாக இந்தியா கொண்டுபோய் சேர்க்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தால் செய்தார்கள் போலும்! 1000 பிரயாணிகள் அதிகமாகப் பிரயாணம் செய்ததால் சுகாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டது. கப்பலில் 3 பேர் மரணமடைந்தார்கள்.

கப்பல் டாக்டராக இருக்கும் டாக்டர் அப்துல் ஹை, ஒரு பாகிஸ்தானி. நான் கவனித்த அளவில், அவர் தன் கடமையைச் சரியாக செய்தாரென்று சொல்ல முடியாது. அவர் தன்னுடையசௌகர்யம்பாதிக்கப்படாமல் பார்த்துக்கொண்டிருந்தார். அளவிற்குமேல் ஆயிரம் பிரயாணிகள் இருந்தும் வழக்கமாக உள்ள குடிதண்ணீர்கூட குழாய்களில் கொடுக்கப்படவில்லை. குடிதண்ணீருக்கு ஜனங்கள் தவித்தனர். தண்ணீர் சப்ளை செய்யும் மனிதன் ஒரு பாகிஸ்தானி. கிழக்கு வங்காளத்தைச் சேர்ந்தவன். குடிதண்ணீர் கூட ஜனங்களுக்கு கிடைக்கவில்லை என்று கப்பலின் பிரதம ஆபீசரிடம் தெரிவித்தேன். அவர் ஒரு ஆங்கிலேயர், மிகவும் நல்லவர். உடனே ஓடிவந்து பார்த்தார். தண்ணீர் சப்ளை செய்யும் பாகிஸ்தானியைக் கண்டித்தார். எனினும் ஒன்றும் பலனில்லை, கப்பல் கேப்டனுக்கும் பிரதம ஆபீசருக்கும் கட்சி. அதில் தண்ணீர் சப்ளை செய்யும் பாகிஸ்தானி கேப்டன் கட்சியைச் சேர்ந்தவனும். அதனால் பிரதம ஆபீசரை அவன் சட்டை செய்யவில்லை. எந்தக் கப்பலிலும், தினம் ஒரு முறையேனும் கப்பல் கேப்டன் எல்லா பிரயாணிகளையும் சுற்றிப் பார்ப்பது வழக்கம். "ஜல துர்க்கா" கேப்டன் ஒருமுறை கூடவந்து எட்டிப் பார்க்கவில்லை. தென்னிந்திய அகதிகளைப்பற்றி அவருக்கு அவ்வளவு அக்கறை!

"ஜல துர்க்கா" ஹோட்டல் சொந்தக்காரரான ஸி. அப்புலு என்பவர் ஓர் ஆந்திரவாசி. மிகவும் நல்ல மனி[...]தர். 3200 பேர்களுக்குப் போதி[...] ரேஷன் அவரிடமிருந்தும் கால[...] காலத்தில் உணவளிக்க முடி[...]வில்லை. ஆயிரம் பேர்களை அதிகமா[...] ஏற்றிய கப்பல் உத்தியோகஸ்த[...]கள், சமைக்கும் அறைகளை விஸ்[...]தரித்துக்கொடுக்கவில்லை. எனினு[...] இரவும் பகலுமாகத் தயாரித்து எ[...] படியும் காரியத்தை நிறைவேற்[...]னர். பிரயாணிகளுக்கு உணவளி[...]க்கும் விஷயத்தில் பிரயாணிகளி[...] சிலரும் பங்கெடுத்துக் கொண்ட[...]னர். கப்பல் உத்தியோகஸ்தர்களி[...] ஒருவரான பிரதமகன்னர் தோழ[...] வி. என். எம். வாசகன் இரவுப[...]லாக வேலைசெய்தார். உணவு அளி[...]க்கும் விஷயத்தில் அவருக்கு ஒ[...]றும் சம்பந்தமில்லாதிருந்தும், ம[...]கள் படுந்துயரைக் கண்டு சகியாத[...] அல்லும் பகலும் வேலை செய்தார்[...] அவரைப் போன்று மற்ற உத்தியோ[...]கஸ்தர்களும் பங்கெடுத்துக்கொண்[...]டிருந்தால் நலமாக இருந்திருக்கும்[...]

பிரயாணிகளுக்குக் குடிதண்ணீ[...] கிடைப்பதே துர்லபமாக இருந்[...]தென்றால், குளிக்கத் தண்ணீர் எ[...]கிருந்து கிடைத்திருக்க முடியும்[...] தண்ணீர் கஷ்டத்தால் 50, 60 பே[...]கள் அம்மை நோய்க்குள்ளானார்கள்[...] 'ஜலதுர்க்கா' சென்னைக்[...] 28—3—49-ந் தேதி பகல் 1[...] மணிக்கு வந்து சேர்ந்தது. எல்லா[...] பிரயாணிகளுக்கும் அம்மைப்பா[...] வைக்கப்பட்டது.

2700-அகதிகளையும், கஸ்ட[...] ஹவுசில் கஷ்ட நிவாரண உத்[...]யோகஸ்தர்கள் ஜில்லாவாரியாக[...] பிரித்துவைத்து, உணவு, உடை[...] முதலியன வழங்கி அவரவர்கள்[...] போக விரும்பும் ஊர்களுக்கு ரயி[...]டிக்கட்டும் எடுத்துக்கொடுத்து செல[...]விற்காக ஒரு ரூபா வீதம் கொடு[...]த்தனுப்பினர், இந்தியாவில் நிலமோ[...] வீடோ இல்லாத சுமார் 60 அக[...]

(3-ம் பக்கம் பார்க்க)

சந்திரநாகூர் பேசுகிறது

3-ம் பக்கத் தொடர்ச்சி

1731-ம் ஆண்டில், ஜோசப் பிராங்கோஸ் டியூப்ளே சந்திரநாகூரின் அதிபராக நியமிக்கப்பட்டார். சந்திரநாகூரை, அதன் வீழ்ச்சியுற்ற நிலையிலிருந்து உயர்த்தி, அதனைக் காப்பாற்றித் தரவேண்டிய பெரும் பொறுப்பு டியூப்ளேயிடம் ஒப்படைக்கப்பட்டது. டியூப்ளே தன்னால் இயன்ற அளவுக்குப் பாடுபட்டார். அவரின் சலியா உழைப்பின் காரணமாகப், பத்து ஆண்டுக் காலத்தில், அண்டை அயலாரெல்லாம் கண்டு அதிசயிக்கும்படியாகச் சந்திரநாகூர் எழில்பெற்று ஓங்கி நின்றது. ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஏராளமான செல்வம் அந்நகருக்குள் நுழைய ஆரம்பித்தது. டியூப்ளேயே தனக்குக் கிடைத்த பெரும் பகுதிச் செல்வத்தை நகர் வளத்தைப் பெருக்கும் துறையில் கொட்டினார். 1741ம் ஆண்டு டியூப்ளே சந்திரநாகூரைவிட்டுப் பாண்டிச்சேரிக்குச் செல்லும்போது, சந்திரநாகூர், ஒரு முக்கிய நகரமாகச் சிறந்து விளங்கி, ஜெட்டா, மோகா, பாஸரா, சீனா போன்ற தொலைநாடுகளோடு வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது. அவர் திபேத் நாட்டோடு கூட வாணிகத் தொடர்பையும், போக்குவரத்துத் தொடர்பையும் உண்டாக்கி வைத்தார்.

டியூப்ளே சந்திரநாகூரை விட்டு நீங்கியதும், சந்திரநாகூரின் வளர்ச்சி வீழ்ச்சியுறத் தொடங்கியது. 1756-ல் பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் போர் மூண்டெழுந்த பொழுது, சந்திரநாகூரிலிருந்த பிரெஞ்சுக்காரர்கள், தாங்கள் நடுவு நிலை வகிக்கப்போகும் தன்மை குறித்து, ஆங்கிலேயர்களின் எண்ணம் என்ன என்று கேட்டார்கள். "எங்களால் முடிந்தவரையில் பார்க்கிறோம்" என்று ஆங்கிலேயர்கள் அதற்கு மறுமொழியாகப் பகர்ந்தார்கள். 1757ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 14ம் நாள், நகரத்திற்கு இரண்டு மைல் தொலைவில் படையை நடத்திக் கொண்டு வந்து நிறுத்திக் கொண்டு, ராபர்ட்கிளைவ், சந்திரநாகூரின் கவர்னராக இருந்த ரெனால்ட் என்பவரைச் சரணடையும்படியாகப் பணித்தார். ரெனால்ட் சரணடைய மறுத்தார். பத்து நாட்களில், கிழக்கிந்திய கம்பெனியின் கப்பற் படையின் உதவி கொண்டு, ராபர்ட் கிளைவ் சந்திரநாகூரை முறியடித்தார். நகரிலிருந்த ஆயுதங்களையும், வெடி மருந்துகளையும் கைப்பற்றியதோடு 1,30,000 பவுன் பொறுமான சொத்துக்களையும் அவர் கொள்ளையிட்டுச் சென்றார்.

அதிலிருந்து சந்திரநாகூர் பிரெஞ்சுக்காரர் கையில் சிலகாலமும், ஆங்கிலேயர் ஆதிக்கத்தில் சிலகாலமும், ஆடும் பந்தெனத் தாவி தாவி இருக்கும்படியான நிலைமை ஏற்பட்டது. 1816ம் ஆண்டில் தான், இறுதியாக ஒரு முடிவு ஏற்பட்டு, பிரெஞ்சுக்காரர்களின் நிலையான ஆதிக்கத்தின் கீழ்ச் சந்திரநாகூர் இருக்கும்படியான நிலை ஏற்பட்டது. 1769ம் ஆண்டில், சிராஜ்—உத்—தௌலா, பிரெஞ்சுக்காரர்கள் பொற்காசுகளையும், பணத்தையும் பிரான்சுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாது என்று தடை உத்தரவு விதித்தார். பிரெஞ்சுக்காரர்கள் அவ்வுத்தரவுக்குக் கீழ்ப்படிய மறுக்கவே, பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கிளைவினால் ஏற்பட்ட அதே தொல்லைகள் சிராஜ்—உத்—தௌலாவாலும் கொடுக்கப்பட்டன. 1778 லிருந்து 1783 வரையில் நகரம் மீண்டும் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. பிரெஞ்சுப் புரட்சியின்போது பிரான்சில் ஏற்பட்ட புரட்சி அலைகள் சந்திரநாகூரையும் மோத ஆரம்பித்தது. அப்பொழுது நகரை விட்டுத் தப்பிஓட எண்ணிய கவர்னரைப் பிடித்து, மற்ற அரசாங்க அனுதாபிகளைச் சங்கிலியால் பிணைத்துக் கப்பலேற்றியதைப் போல், அவரையும் ஏற்றினார்கள். பாரிஸ் கொலைக்கூடத்தில் காவு கொடுக்கும் பொருட்டே அவர்களெல்லாம் ஏற்றுமதி செய்யப்பட்டார்கள். லார்டு கார்ன்வாலிஸ் என்ற ஆங்கிலேயரின் தலையீட்டின் பேரில் அத்திட்டம் கவிழ்க்கப்பட்டது. கப்பலில் அடைக்கப்பட்டிருந்த திக்கற்றவர்களெல்லாம் கரை சேர்க்கப்பட்டுக் காப்பாற்றப்பட்டார்கள். 1793லிருந்து 1816 வரையில் சந்திரநாகூர் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ்த்தான் இருந்துவந்தது. 1802ம் ஆண்டில் மட்டும் சிலதிங்கள்கள் பிரெஞ்சு ஆதிக்கத்தில் அகப்பட்டிருந்தது. 1816க்குப் பிறகு பிரெஞ்சு ஆட்சி நிலையாக நிலைத்திருக்கத் தொடங்கியது.

சந்திரநாகூர் என்ற பெயர், சந்திரன்—நகர் என்ற சொற்றொடரிலிருந்து வந்திருக்கக்கூடும் என்றும், சந்தனமரம் நிறைந்த நகர் என்ற பொருளைக் கொடுக்கக்கூடிய சொற்களால் அமைந்தது என்றும் ஊகிக்கிறார்கள். சந்திரநாகூர் இரண்டு பெரும் பாகங்களாகப் பிரிந்திருக்கிறது. தென்பாகம் பிரெஞ்சு ஆட்சியின் கீழும், வடபாகம் இந்திய ஆட்சியின் கீழும் இதுகாறும் இருந்து வந்தன. புகைவண்டி நிலையத்திற்கு அப்பால் ஓடிக்கொண்டிருக்கும் கழிநீர்க் கால்வாய்தான் இரண்டு பாகங்களையும் பிரிக்கும் எல்லைக் கோடாக இருந்துவருகிறது. பதினெட்டாவது நூற்றாண்டில், பிரெஞ்சுக்காரர்கள் குடியேறிய பகுதியைச் சுற்றிலும் அகழியொன்று வெட்டப்பட்டிருந்தது என்றும், பிரெஞ்சு—பிரிட்டிஷ் போராட்டம் ஏற்பட்டபோது, கிளைவின் வலுக்கட்டாயத்தின் பேரில் அவ்வகழி தூர்க்கப்பட்டது என்றும் அறியப்படுகின்றன. 1783ம் ஆண்டில் ஏற்பட்ட வர்செயில்ஸ் உடன்படிக்கைப்படி மீண்டும் அகழியைத் தோண்டிக் கொள்ளப் பிரெஞ்சுக்காரர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

இப்பொழுது விளங்கிவரும் பிரெஞ்சு சந்திரநாகூர், நான்குமைல் நீளமும், இரண்டுமைல் அகலமும் கொண்டதாகும். நகருக்கு முன்பெல்லாம் இருந்த பொலிவு இப்பொழுது நீங்கிவிட்டது. இப்பொழுது அது ஒரு சிறு உள்நாட்டு நகரத்தைப்போல் இருந்து வருகிறது. வெளிநாட்டு வாணிகம் சிறிதுகூட அங்கு இற்றைக் காலத்தில் நடைபெறுவதில்லை. சந்திரநாகூர் நகரம் நன்றாகப் பாதுகாக்கப்பட்டு, தெருக்களெல்லாம் தூய்மையானவைகளாக வைக்கப்பட்டிருக்கின்றன. அது சிறிய சிறிய வீடுகளால் நிறைந்திருக்கின்றது. நகரசபை வசதிகளெல்லாம் பாராட்டத்தகுந்த வகையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. வரலாற்றுச்சிறப்புடைய சின்னங்கள் சில அங்கு காணப்படுகின்றன. 200 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட நந்த துலால் கோயில் ஒன்று அங்கு இருந்துவருகின்றது. 1882-ம் ஆண்டில் நிறுவப்பட்ட

டியூப்ளே கல்லூரி ஒன்றும் அங்கு காட்சியளித்து வருகின்றது. ஹூக்ளி நதிக்கரையில் நிழல்தரும் பெரும்மரங்கள் இருபுறமும் அழகுற அமைந்து நிற்க, அரைமைல் நீளமுள்ள உலாவுஞ் சாலையொன்று வனப்பைவாரி இறைத்துக்கொண்டிருக்கிறது. மேற்கு வங்கத்தில் இருப்பதைக் காட்டிலும், எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் சதவிகித எண்ணிக்கை, சந்திரநாகூரில் சற்று அதிகமானதாகவே காணப்படுகிறது. நகரின் மொத்த மக்களின் எண்ணிக்கை 52,000 ஆகும்.

விடுமுறை நாளல்லாத மற்ற நாட்களில் அந்நகரை யாரேனும் சுற்றிப் பார்க்க நேர்ந்தாலும், விடுமுறை நாள் போன்றதொரு சூழ்நிலையே நிறைந்திருப்பதைக் காணலாம். தெருக்களெல்லாம் நடமாட்டமில்லாமல் வெறிச்சென்று இருக்கும். வியாபாரக் கூடங்களில் சிறிதளவு வியாபாரந்தான் நடைபெறுகிறது. இந்நகரிலுள்ள பெரும்பாலான மக்கள், இந்திய யூனியனிலுள்ள சணல் ஆலைகளிலும், தொழிற்சாலைகளிலும் அலுவலகங்களிலும் ஆற்றைக் கடந்து சென்று வேலைபார்க்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். சந்திரநாகூரில் குறிப்பிடத்தகுந்த மாதிரியிலுள்ள தொழிற்சாலை எதுவுங் கிடையாது. மரச்சாமான்கள் செய்வதும், கைத்தறி நெசவு புரிவதும், நகைகள் செய்வதும் முக்கியமான உள்நாட்டுத் தொழில்களாகும். இதுவரையில் அங்குவழக்கு மன்றங்களில் பயன்படுத்தப்பட்டு வந்த மொழி பிரெஞ்சுமொழியாகும். அப்பீல் விண்ணப்பங்களெல்லாம் பாண்டிச்சேரிக்கே அனுப்பப்பட்டு வந்தன.

இதுகாறும் ஆட்சிப்பீடத்தின் அதிபதியாக ஒரு பிரெஞ்சுக்காரரே இருந்து வந்தார். பிரதம போலீஸ் அதிகாரியும் பிரெஞ்சுக்காரரே. தென்னாட்டிலிருந்து வந்த பலரும் இந்நகரில் அலுவலகங்களில் வேலை பார்த்து வருகின்றனர். ஆட்சி அதிபர், தேர்ந்தெடுக்கப்பட்ட 25-அங்கத்தினர்களாலான ஆட்சிக்குழுவின் உதவிபெற்று ஆட்சிநடத்தி வருகிறார். அவர்களில் ஆறுபேர் மந்திரிகளாகப் பதவியேற்று வேலைசெய்து வருகிறார்கள்.

சிலநிபந்தனைகளோடு, பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட வயது வந்தோர் எல்லோர்க்கும் அங்கு ஓட்டுரிமை இருந்து வருகிறது. பொது மக்கள் வாக்கெடுப்பில் ஓட்டுரிமை வழங்கும் தகுதி பெற்றவர்களின் எண்ணிக்கை மட்டும் 12,194. 19—6—49-ம் நாள் நடைபெற்ற பொது மக்கள் வாக்கெடுப்பில், கலந்துகொண்டு ஓட்டுரிமை வழங்கியவர்களின் எண்ணிக்கை மட்டும் 7,587. இவைகளில் இந்திய யூனியனோடு சேர்வதற்கென்று வழங்கப்பட்ட ஓட்டுக்கள் 7,473. பிரெஞ்சு ஆதிக்கத்தின்கீழ் இருக்க வழங்கப்பட்ட ஓட்டுக்கள் 114.

இனிச் சந்திரநாகூர் இந்திய யூனியனோடு இரண்டறக் கலந்து நிற்கும் என்ற நிலை இப்பொழுது ஏற்பட்டுவிட்டது. 260 ஆண்டுகளுக்கு முன் விதைக்கப்பட்ட பிரெஞ்சு ஆதிக்க விதை, இவ்வளவு காலமும் செடியாய் வளர்ந்து, பூத்துக், காய்த்துக், கனிந்து நின்று, இப்பொழுது பட்டு விழும் நிலையை எய்திவிட்டது. இயற்கைக் கற்பிக்கும் பாடம் அதுவாகத்தானே இதுகாறும் இருந்து வருகிறது.

# வரியின் வால் நீளுகிறது

"நான் கூறிய இவ்வளவையும் கேட்டுக்கொண்டிருந்தாய், இப்பொழுது சொல், நான் குற்றவாளியா?"

"மீண்டும் கேட்கிறேன் சொல், நான் குற்றவாளியா?"

"ஏன் மௌனம் சாதிக்கிறாய்? சொல்!"

"நீ மௌனம் சாதிப்பதிலிருந்து நான் கூறியவற்றை ஒப்புக்கொண்டாய் என்று தெரிகிறது. குற்றம் என்னுடையது அல்ல என்பதை இனியேனும் உணர்ந்து கொள்"

கழுத்தை நெறித்துக் கீழே தள்ளி, பிணமாக்கப்பட்டுக் கிடக்கும் மனைவி முன்பு, மதிமயங்கி நின்று, "நான் கெட்டவழிகளிற் செல்லாமல் என்னை நீ தடுத்திருக்கலாம். நீ செய்யத் தவறினாய். குற்றம் உன்னுடையது. அப்படியிருக்க நான் எப்படிக் குற்றவாளியாவேன்" என்று பிணத்திடம் கேட்டு, பிணம் பதில் பேசாது இருப்பது கண்டு, அது மௌனம் சாதிப்பதாகக் கருதித், தான் சொன்னவற்றையெல்லாம் அவள் ஏற்றுக்கொண்டதாகக் கொண்டு, தனக்குத்தானே கணவன் தீர்ப்புக் கூறிக்கொள்கிறான். இதுபோன்றதொரு காட்சியை "இழந்த காதல்" நாடகத்தில் பலரும் கண்டிருக்கக் கூடும்.

பிணம் பேசாது இருப்பதைக் கொண்டு, தான் பேசியவற்றையெல்லாம் அது ஒப்புக்கொண்டுவிட்டது என்று மதிமயங்கிக் கூறும் கணவன் போல, மந்திரி கோபால் ரெட்டியார் ஒரு காட்சியை அண்மையில் நடத்திக் காண்பித்திருக்கிறார்.

விற்பனை வரியைப் பொதுமக்கள் சென்ற பத்து ஆண்டுகளாகக் கொடுத்துவருகிறார்கள்; மறுமொழி கூறவில்லை; அவர்கள் கொடுத்துப் பழகிவிட்டார்கள்; ஆகவே இனியும் மறுக்கமாட்டார்கள் என்று விற்பனை வரி பற்றித் தானே தீர்ப்புக் கூறிக்கொண்டு, சமாதானம் அடையப் பார்க்கிறார் மந்திரி கோபால் ரெட்டியார். சென்னை சட்டசபையில் இக்கருத்துப்பட அவர் 13-6-48ம் நாளன்று கூறியுள்ளார்.

வெந்தபுண்ணிலே வேல்களை ஒன்றன் பின் ஒன்றாகப் பாய்ச்சுவதைப் போல, வரிப்பளுவைத் தாங்கமாட்டாமல் தவிக்கும் ஏழைப் பொதுமக்கள் மீது, மேலும் மேலும் வரிகளை அடுக்கிச் செல்லும் வாடிக்கைப் பழக்கத்தில், சென்னை அரசாங்கம் முனைந்து முன்னேறுகிறது. அழவும் ஆற்றலற்றப் பொது மக்கள் பேசமுடியாமல், வரிப்பளுவைத் தாங்கிக்கொண்டு, வகையில்லாமல் தத்தளித்துக் கொண்டிருக்கும் நிலை மந்திரி கோபால் ரெட்டியாருக்குப் 'பழகிப்போன' சாதாரண நிலையாகத் தென்படுகிறது.

இன்றைய அரசாங்கம் போடும் வரிகள் எல்லாம், பொதுமக்களின்

(12-ம் பக்கம் பார்க்க)

# மக்கள் பெருக்கம்

சு. இரகுபதி

மக்கள் எண்ணிக்கை வரவர எண்ணில் அடங்காது ஏறிக்கொண்டே செல்கின்றது. பொதுவாக உலகிலும், குறிப்பாக இந்தியாவிலும், இப்பிரச்சினை மிகவும் தீர்க்கப்பட வேண்டிய இன்றியமையாத பிரச்சினையாக இருக்கின்றது. ஆகையால், நாட்டின் நலனில் அக்கரை கொண்டயாரும், இவ்வுயிர்ப்பிரச்னையைத் துச்சமென மதிக்கமாட்டார்கள். பாமரர் முதல், படித்தவர்கள் ஈறாக உள்ள யாவரும் கவனம் செலுத்த வேண்டிய முக்கிய பிரச்னையாகும் இது.

பொதுவாக, ஒரு நாட்டில் மக்கள் எண்ணிக்கை அதிகரித்தால், அந்நாட்டு அரசாங்கம், மக்கள் யாவரும் வாழ வழி வகுத்துத் தர முன் வருகின்றது. இம்முயற்சி இறுதியில் போராகவும் முடிகின்றது. இந்தியா போன்ற துணைக்கண்டத்திலிருந்து நூற்றுக்கணக்காகவும், ஆயிரக்கணக்காகவும் மக்கள் மலேயா, இலங்கை, ஆப்பிரிக்கா முதலிய நாடுகளுக்கு—தூதுவர்களாக அல்ல—கூலிகளாகச் செல்கின்றனர்.

மக்கள் எண்ணிக்கை பெருகப் பெருக, பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதுமிகவும்கடினமாகிறது சமுகத்தில் பல்வேறுஇன்னல்கள் துளிர்க்கின்றன. இவைகளைத் தீர்க்க முடியாமல்அரசாங்கம் அவதியுறுகிறது. மக்கள் வாழ்க்கை நிலை சரிவதற்கும் இது காரணமாக இருக்கின்றது.

மக்கள் பெருக்கம் நாட்டின் உயிர்ப்பிரச்சனைகளில் ஒன்று என்றும், அதில் மக்கள் யாவரும் கவனம் செலுத்த வேண்டியது மிக அவசியமானது என்றும் ஆய்ந்தறிந்து வெளியிட்டார் அறிஞர் மால்தஸ் (Malthus) என்றஆங்கிலேயர். ஆனால் அவருடைய கொள்கைஅப்பொழுது இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சியால் பொய்ப்பிக்கப்பட்டது (Falsified). என்றாலும் அவருடைய கொள்கை பிறகு பொருளாதாரவிற்பன்னர்களால் போற்றப்பட்டது—போற்றப்பட்டு வருகிறது. மால்தஸ் கூற்றுப்படி, மக்கள் எண்ணிக்கை 20 ஆண்டுகளுக்கு ஒருமுறை இரண்டு மடங்கு ஆகின்றது. ஆகையால் இப்பிரச்சினையைக்கவலையுடன் சிந்திக்கவேண்டியது அவசியமாகிறது.

மக்கள் எண்ணிக்கை பல்வேறு காரணங்களால் பெருகுகின்றது. வாழ்க்கை வசதி அதிகமுள்ள பிரதேசத்திலும், வெப்பம் அதிகமாக உள்ள இந்தியா போன்ற நாடுகளிலும் எண்ணிக்கை ஏறிக்கொண்டேயிருக்கும். மனிதன் வேட்டுவனாக இருந்த நிலையில் (Hunting Stage) வாழ்க்கை நிச்சயமற்றதாக (Precarious)இருந்ததால் மக்கள்பெருக்கம் என்று ஏற்படவில்லை. மனிதன் மீன் பிடித்தும், பயிர்த்தொழில் நடாத்தியும் வாழ்க்கையை நிலையுள்ளதாக ஆக்கிக்கொண்டபின், மக்கள் பெருக்கம் மிக மிக அதிகமாயிற்று. அந்நிலை வளர்ந்தது. அன்னியர் படைஎடுப்பு, கொள்ளை, நோய் முதலியவைகளிலிருந்து மக்கள் ஓரளவாவது பாதுகாக்கப்படும் இந்நாளில், மக்கள் பெருக்கம் முன்னை விட அதிகரிப்பது நமக்கு அதிசயத்தையோ அதிர்ச்சியையோ உண்டுபண்ணுவதாயில்லை. ஆனால் அவைகளைத் தடுக்க வழிதேடுவதே இப்பொழுது சிறந்த பணியாக ஏற்பட்டுவிட்டது. பொதுவாக உலகத்தைப் பற்றியும், சிறப்பாக நம் தாயகத்தைப் பற்றியும் சிந்தித்து ஆவன செய்யவேண்டியது நமது அரிய கடமையாகும்.

அண்மையில், அரசாங்கத்தார் சட்டசபைத் தேர்தலுக்கு எடுத்த 'வயது வந்த வாக்காளர் பட்டியலை'ப் பலரும் பார்த்திருக்கலாம். அதுவும் கிராமங்களில் எடுக்கப்பட்டதைப் பார்த்தால், ஒவ்வொரு வீட்டிலும் வயது வந்த வாக்காளர்களே 7, 8 பேர்களுக்கு மேலிருப்பார்கள். இவர்களேயன்றிச் சிறு பிள்ளைகளையும் சேர்த்தால், எத்தனை பேர் இருப்பார்கள் ஒவ்வொரு எளிய குடும்பத்திலும்! மற்ற நாடுகள் போலில்லாமல், கிராமங்களையே தன்னிடத்து அதிகமாகக் கொண்டுள்ள நம் நாட்டில், கிராமங்களின் நிலையைச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டியது அவசியமானதாகிறது. இவ்வாறு ஒவ்வொரு குடும்பத்திலும் 10, 12 பேர்கள் இருந்தால் எவ்வாறு ஒருவனுடைய வருவாய் குடும்பத்தை நடத்தப் போதுமானதாக இருக்கும்? எவ்வளவு பணக்காரக் குடும்பமாக இருப்பினும், 2, 3 தலைமுறைகளில் (Generations) அக்குடும்பம் ஏழ்மைக்கு இலக்காகின்றது. இதற்கு இன்றுள்ள சொத்துரிமைச் சட்டம் சாதகமாக இருக்கின்றது. இந்நிலை ஒழிக்கப்பட வேண்டும்.

எந்த முயற்சியும், 'மக்கள் பெருக்கம்' என்றபிரச்சனை திரும்வரையில், வீண் முயற்சியாகவே முடியும். ஆகையால் மக்கள் பெருக்கத்தின் விளைவையும்; அதனைத் தடுப்பதால் ஏற்படும் நலனையும், அரசாங்கம் பிரசாரப் பீரங்கி மூலமும், படக்காட்சி மூலமும் பட்டி தொட்டிகளிலுள்ள மக்களும் புரிந்துகொள்ளும் வகையில் தெரிவிக்க முற்படவேண்டும். இதன் அவசியத்தை அறிய மக்களுக்குக் கல்வி இன்றியமையாதது. ஆரம்பக் கல்வியிலேயே மக்கள் பெருக்கத்தின் கேடுகளைப் பற்றி விளக்கவேண்டும். ஆனால் இன்றுள்ள கல்வித் திட்டப்படி கல்லூரிப் படிப்பிலேதான், அதுவும் பொருளாதார மாணவர்களுக்குத்தான் இன்னோரன்ன தலைப்புகள் போதிக்கப்படுகின்றன. ஆனால் மற்ற மாணவர்களுக்கு இதன் அரிச்சுவடி கூடப் போதிக்கப்படுவதில்லை. ஒவ்வொரு ஆணும், பெண்ணும் இவ்வுயிர்ப் பிரச்சனையை உணர்ந்திருப்பதே சாலச் சிறந்ததாகும்.

மக்கள் பெருக்கத்திற்கு மற்றொரு மகத்தான காரணம் இளமை மணம். இவ்விளமைத் திருமணங்கள் அயல் நாடுகளிலும் பழக்கத்தில் இருந்து வந்தது. ஆனால் அங்கு அப்பழக்கம் கைவிடப்பட்டுவிட்டது. நம் யாகா

(12-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 26—6—49 [காஞ்சி

# பிரிவினை நாள்

ஜுலை 1! நாட்டுப்பிரிவினை கோரும் நன்னாள்! உண்மை நிலையை ஊருக்கெல்லாம் எடுத்துக்கூறும் உயரிய நாள்! அடிமைத்தளைகளெல்லாம் அகன்று, உரிமைநிலைபெற, உணர்ச்சி கொள்ளும் நாள்! உறுதிமொழி கூறும் நாள்! ஊக்கங் கொடுக்கும் நாள்! "திராவிடநாடு திராவிடர்க்கே" என்ற ஒலி திக்கெட்டும் முழங்கும் நாள்! திராவிடப் பெருங்குடி மக்களுக்கோர் திருநாள்!

சென்ற இரண்டு ஆண்டுகளாக, ஜுலைமுதல்நாளைத் திராவிடநாட்டுப் பிரிவினை கோரும் நன்னாளாகத் திராவிடர் கழகங்களெல்லாம் கொண்டாடி வருகின்றன. திராவிட நாடு, இன்றைய சூழ்நிலையில் பிரிந்துநிற்க வேண்டியது எவ்வளவு இன்றியமையாததாகும் என்பதைத் திராவிடப் பெருங்குடி மக்களுக்கெல்லாம் எடுத்துக்கூறும் ஒரு வாய்ப்பினைக் கொள்ளவே, ஜுலை முதல்நாளைப் பிரிவினை நாளாகக் கொண்டாட வேண்டும் என்று தலைமைத் திராவிடர் கழகம் முடிவு செய்தது.

திராவிட நாட்டுப் பிரிவினைக் கொள்கை ஏறத்தாழப் பத்து ஆண்டுக்காலமாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. உண்மை—நீதி—நேர்மை—ஒழுங்கு—தேவை என்ற அடிப்படைகளின்மீது நின்றுதான் நாம் நாட்டுப்பிரிவினையைக் கோரி வருகிறோம். பிரிவினைக் கொள்கையை வலியுறுத்தத்தொடங்கிய காலத்தில், எதிர்ப்புகள் பலவற்றையும் வாரிவீசி, கொள்கையைப் பரவவொட்டாமல் தடுக்க, முனைந்து நின்ற இளைஞர்கள் —மாணவர்கள்—படித்தவர்கள்—பாமரர்கள் ஆகியவர்களில் பலரும், இன்று திராவிடர் கழகப் பாசறையில்இடம் பெற்று விளங்குகிறார்கள். மிகச் சிறிய அளவு சக்தியைக்கொண்டு அறிவுப்பெரும்படையைத் திரட்டும் நற்பணியிலே ஈடுபட்ட திராவிடர் கழகம் ஓரளவுக்கு வெற்றி பெற்றது என்றே கூறவேண்டும். இனியும் வெற்றி பெறும் என்பதில்ஐயமில்லை.

திராவிடர் கழகத்தின் வளர்ச்சி கண்டு மாற்றுக் கட்சியினரெல்லாம் இன்று மிரளுகின்றனர். எப்படியாவது திராவிடர் கழகத்தை ஒழித்துவிடவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு நாடெங்கும் சுற்றி வருகிறார்கள். வசைமாரி பொழிபவர்களை விலைகொடுத்து வாங்கி, ஆங்காங்கு அனுப்பிவைக்கவும் அவர்கள் தயங்கவில்லை. தூற்றுவதையேகொள்கையாகக்கொண்ட சில வாரஇதழ்களையும் துவக்கி, திராவிடர் கழகம் சொல்லும் எதையும், காரணங்காட்டி மறுக்க இயலாமல், வாய்க்குவந்தபடி எல்லாம் உளறிக்கொட்டி மக்களிடம் துவேஷ எண்ணத்தை வலிந்து பரப்ப ஒருமுகமாக முற்பட்டிருக்கின்றனர். இத்தகைய சூழ்ச்சிச் செயல்களால் திராவிடர் கழகத்தினர்க்குத் தொல்லைகள் கொடுக்கமுடியுமேயல்லாது, திராவிடர் கழகஇலட்சியத்தின் வலிவைச் சிறிதுகூடக் குறைக்கமுடியாது என்பது நமக்கு நன்கு தெரியும். அவ்வளவு சாதாரணமாகப், புட்டால் புண்டு விடுவது மாதிரியோ, ஒடித்தால் ஒடிந்து விடுவதுமாதிரியோ, உடைத்தால் உடைந்து விடுவது மாதிரியோ இருப்பது அல்ல கழகத்தின் கொள்கை. என்றாலும் எதிர்ப்புச் சக்திகள் தங்களைச் சூழ்ந்து நிற்கின்றன என்பதை மட்டும் உணர்ந்து, செயலாற்ற வேண்டிய கடப்பாடுடையவர்களாக இருக்கிறார்கள், திராவிடர்கழக இளைஞர்களும் தொண்டர்களும். அவர்கள் தங்களுடைய வலிவை ஒன்றுதிரட்டி, ஒழுங்காகச் செயலாற்ற உறுதிமொழி எடுத்துக் கொள்ளும் பொருட்டே, ஜுலை முதல் நாள் பிரிவினை நாளாகக் கொள்ளப்பட்டிருக்கிறது.

**ஜுலை 1**
**பிரிவினை நாள்**
**உறுதிமொழி கூறும்**
**உரிமை நாள்**

அரசியல்—பொருளாதார சமூகக் காரணங்களைக்காட்டி நாட்டுப் பிரிவினையைக் கோரி நிற்கிறோம். வரலாற்றையும், இலக்கியத்தையும் சான்றுக் கழைத்து, பிரிவினைக்கொள்கையைச் சொல்லவைக்கிறோம்; பொருளாதார நிலையைப் பேசவிடுகிறோம்; அரசியல் காரணங்களை முன் நிறுத்தி அறிவுறுத்தச் சொல்லுகிறோம். நாமாக இட்டுக்கட்டி எதையும் சொல்வதில்லை; இன்ப இலட்சியத்தை இனிய முறையில்தான் இயம்பி வருகிறோம்.

திராவிடர் கழகத்தில் உறுப்பினர்களாகப் பலர் பதிவு செய்து கொண்டுள்ளார்கள் என்றாலும், பதிவு செய்து கொள்ள வேண்டியவர்கள் ஏராளமாக இருக்கின்றார்கள். பதிவு செய்து கொண்டவர்கள்—பதிவு செய்து கொள்ள வேண்டியவர்கள், இந்த இருவகையினர்க்கும் இடையிலே இருக்கும் எண்ணிக்கையை உணர்ந்து கிளைக் கழகங்கள் தொண்டாற்ற முனைய வேண்டும்.

கழகம் அமைத்தல்—கட்டுப்பாடு கொள்ளுதல்—செயற் திட்டம் வகுத்தல்—தொண்டர் படை கூட்டுதல்—உறுப்பினர் சேர்த்தல்—கொள்கை விளக்கம் செய்தல்—உறுதிமொழி கூறல் போன்ற சீரிய செயல்களை இந்தப் பிரிவினை நாளன்று மேற்கொள்ள ஊர்தோறும் உள்ள கழகங்களெல்லாம் முற்பட வேண்டும்.

தனிப்பட்ட ஸ்தாபனங்கள்—நபர்கள் ஆகியோரின் குறைகளையும்கேட்டு ஆவனசெய்வதென்று ஐக்கியநாடுகள் சபை முடிவு செய்துள்ளது. ஆகவே 'திராவிடநாடு திராவிடர்க்கே' என்ற பெரு முழக்கம் ஐக்கிய நாடுகள் சபையின் காதில் விழும் வண்ணம் எழுப்பப்படவேண்டும். அதற்குப் பெரும்பாலான திராவிடப் பெருங்குடிமக்களின் ஒலிகளெல்லாம் ஒன்று சேரவேண்டும். அந்தச் சீரியநிலையை உண்டாக்கப் பிரிவினை நாள் பயன்படுமாக!

—✻—

## திருமணம்

—✻—

திருவண்ணாமலைத் தோழர் ஆர். எஸ். சாமி, அவர்களின் புதல்வர் சாந்தலிங்கத்துக்கும் தோழர் பால கிருஷ்ணன் அவர்கள் புதல்வி கவுசல்யாவுக்கும் 5-6-49ல் தோழர் அண்ணல்தங்கோ அவர்கள் தலைமையில் வேலூரில் சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது.

# ★ வழக்காடு ★

"திராவிட நாடு" இதழிடம் ரூ 3000-0-0 ஜாமீன் தொகையாகப் பறிக்க முற்பட்டு, அடக்குமுறை ஆயுதத்தைக் கட்டவிழ்த்துவிட்டிருக்கும் சென்னை அரசியலாரின் போக்கைக் கண்டிப்பதோடு, நாம் வழக்காடு மன்றம் ஏறி, வாதாடி, நீதி கோரி நிற்கவேண்டியது அவசியமாகும் என்பதை வற்புறுத்தி அன்பர்களும், ஆதரவாளர்களும் பலர் நம்மை ஊக்குவித்து வருகிறார்கள்.

"திராவிட நாடு" மீது அரசியலார் தொடுத்திருக்கும் குற்றச்சாட்டு, 1931ம் ஆண்டின் இந்தியன் பிரஸ் (அவசர அதிகாரங்கள்) சட்டம், (1931ம் ஆண்டின் சென்ட்ரல் ஆக்ட் XXIII பிரிவு 4 விதி (1) (5) படியாகும். [Indian Press (Emergency Powers) Act, 1931 (Central Act XXIII of 1931), Section 4 (1) (2) ] இந்த விதியின் கீழ்ச் செய்திருப்பதாகக் கருதப்படும் குற்றத்திற்காக, அதே சட்டம் பிரிவு 7 விதி (3) படி [Same Act Section 7 (3) ] ரூ 3000 ஜாமீன் தொகை கட்டியாக வேண்டும் என்று உத்தரவு இடப்பட்டது.

குற்றமுடையனவாகக் கூறப்படும் கட்டுரைகள், 4—4—48 இதழில் வந்த "**சாந்தி ராமசாமியும் பெரியார் ராமசாமியும்**" என்ற தலையங்கமும், 18—4—48 இதழில் வந்த "**வெள்ளி முளைக்க ஆண்டுகள்! —'வகுப்புவாதம்'— சோகத் தொடர் கதை**" என்ற தலையங்கமுமாகும்.

கடமையைச் செய்தோம் என்ற களிப்பைப் பெறுவதற்காவது மன்றம் ஏறி வாதாடி நின்று பார்க்கலாம் என்றே எண்ணுகிறோம்.

"திராவிட நாடு" இதழ் மீது ஆதரவு காட்டி வரும் கொள்கைப் பற்றுடைய வழக்கறிஞர்கள், மேற்குறித்த கட்டுரைகளைப் படித்தறிந்து, வழக்காடுவது பற்றிக் கூறக்கூடிய தங்கள் ஆலோசனைகளை அறிவிக்க முன்வருவார்களாயின், அவற்றை அன்புடன் ஏற்று, சிந்தித்து முடிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆலோசனைகளை விரைவில் எதிர்பார்க்கிறோம்.

வழக்கு, சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடுக்கும்படியான நிலை ஏற்பட்டால், கொள்கைப் பற்றுடைய வழக்கறிஞர்களில், யார் யார், சென்னைக்கு வந்து வழக்காடலுக்கு உதவி செய்ய இயலும் என்பதையும், அதற்கான நிபந்தனைகளையும் அறிவிக்க வேண்டுகிறோம்.

**21—6—49-ம் நாளன்று ஜாமீன் தொகை ரூ. 3000/-ம் கட்டப்பட்டுவிட்டது.**

கேட்ட தொகைக்குமேல் அன்பர்கள் நன்கொடையாகக் கொடுத்த—கொடுத்துவரும் தொகை வழக்கு நிதியில் சேர்க்கப்பட்டுக் குறிக்கப்பட்டு வருகிறது.

இதுவரை நன்கொடை கொடுத்துதவிய தோழர்களுக்கும், இப்போது கொடுத்துதவிவரும் தோழர்களுக்கும் எமது நன்றி.

ஆசிரியர்.
"திராவிட நாடு"

## வழக்கு நிதி

| | | |
|---|---|---|
| ஜாமீன் கட்டிய தொகை போக மிச்சம் கையிருப்பு | | 0—12—7 |
| எஸ். அருண், உடுமலைப்பேட்டை | | 5—0—0 |
| பி. ஆர். எஸ். பழனியப்பன், சேலம் | | 1—0—0 |
| எ. எஸ். சிஸ்க், நாகர்கோயில் | | 5—0—0 |
| பி. எம். முத்து, பூனா | | 1—0—0 |
| மா. ப. மாரிமுத்து, போடிநாயக்கனூர் | | 10—0—0 |
| எம். பி. வேலாயுதம், கோட்டாறு | | 3—0—0 |
| அ. வெ. க. கணபதி, திண்டுக்கல் | | 1—0—0 |
| மா. சு. | கடம்பர் கோயில் | 1—0—0 |
| ஆசிரிய அன்பர், | ” | 1—0—0 |
| மா. முருகேசன், | ” | 1—0—0 |
| ஆ. ஆறுமுகம், | ” | 0—8—0 |
| எப். கோவிந்தன், | ” | 0—8—0 |
| என். தக்ஷிணாமூர்த்தி, கரூர் | | 1—0—0 |
| தமிழ்வாணன், | சென்னை | 1—0—0 |
| கிருஷ்ணன், | ” | 0—8—0 |
| சுப்பிரமணியன், | ” | 0—8—0 |
| அண்ணாச்சி, | ” | 0—8—0 |
| ந. கே. ஆறுமுகம், | ” | 0—8—0 |
| கெ. குப்புசாமி, | ” | 0—8—0 |
| எஸ். கோவரத்தினம், | ” | 0—4—0 |
| ஆர். இராதாகிருஷ்ணன், வேலூர் | | 5—0—0 |
| வி. பார்த்தசாரதி, ஜோலார்பேட்டை | | 5—0—0 |
| ஓர் அன்பர், தொகரப்பள்ளி | | 20—0—0 |
| W.P.A.S. பாண்டியன், பட்டிவீரன்பட்டி | | 100—0—0 |
| சி. பழனிசாமி, திருப்பூர் | | 0—8—0 |
| என். பழனிசாமி, | ” | 0—8—0 |
| எல். கே. அருணாசலம், | வெள்ளைக்கோயில் | 5—0—0 |
| எஸ். வீராசாமி, | ” | 2—0—0 |
| டி. ஆர். கணபதி, | ” | 1—0—0 |
| திரு. நாகம்மாள், | ” | 1—0—0 |
| ” கௌரி அம்மாள், | ” | 1—0—0 |
| ” கமலம், | ” | 1—0—0 |
| ” சரோஜினி, | ” | 1—0—0 |
| ச. தியாகராசன், | ” | 0—8—0 |
| கே. இராமசாமி, | ” | 0—8—0 |
| மா. சு. அங்கப்பன், | ” | 0—8—0 |
| சி. தி. இராசு, | ” | 0—8—0 |
| திரு. கஸ்தூரி, | ” | 0—4—0 |
| கே. நாச்சியப்பன், | ” | 0—8—0 |
| டி. வி. குமாரசாமி, | ” | 0—6—0 |
| ஆர். பாப்பையன், | ” | 0—4—0 |
| ச. மெ. சாமி, | பூனா | 10—0—0 |
| ம. அ. இராமநாதன், | ” | [illegible] |
| சுப்பையா, | ” | 1—0—0 |

| | | |
|---|---|---|
| ஞானமுத்து, | ,, | 1—0—0 |
| ஓ. எஸ். குரு, (ஆந்திரர்) | ,, | 0—8—0 |
| கே. தாமோதரன், | ,, | 2—0—0 |
| நடேசன், | ,, | 1—0—0 |
| எஸ். பால், | ,, | 5—0—0 |
| தன்ராஜ், | ,, | 3—0—0 |
| ந. ரா. விஸ்வநாதன், | ,, | 3—0—0 |
| கே. சுப்பிரமணியம், | ,, | 1—0—0 |
| ஷாமராவ், (கன்னடம்) | ,, | 1—0—0 |
| பி. கே. முனிரத்தினம், | ,, | 1—0—0 |
| கோவிந்தராஜுலு, | ,, | 2—0—0 |
| துரைராஜ், | ,, | 1—0—0 |
| எம். கருப்பையா, | ,, | 2—0—0 |
| டேனியல், | ,, | 1—0—0 |
| மாரியப்பன், | ,, | 0—8—0 |
| வி. ஜி. குருசாமி, | எட்டயாபுரம் | 1—0—0 |
| சி. செல்லையா, | திருச்சி | 1—0—0 |
| இரா. பாவனுசம், | கோட்டாறு | 0—8—0 |
| எ. குமாரவேலு, | ,, | 5—0—0 |
| பி. எஸ். மணி, | செங்கணச்சேரி | 1—0—0 |
| எம். கன்னய்யன், | பாண்டிச்சேரி | 3—0—0 |
| எ. தன்ராஜ், | பாரீனு | 5—0—0 |
| ஜி. கே. சுவாமி, | ,, | 5—0—0 |
| ஆர். நடேசன், | ,, | 5—0—0 |
| எஸ். ஜான், | ,, | 5—0—0 |
| எம். நந்தமிழன், | சேலம் | 1—0—0 |
| கே. ஜெகதீசன், | ,, | 25—0—0 |
| ஓர் அன்பர், | டில்லி | 25—0—0 |
| வே. வ. இராமசாமி, | விருதுநகர் | 51—0—0 |
| ஓர் அனுதாபி, | சேலம் | 1—0—0 |
| ரோ. சு. அருணாசலம், | ,, | 50—0—0 |
| ஆர்.நாராயணசாமி& கே.ஏ.சங்கரன், | சேலம் | 50—0—0 |
| கைலம். வே. அப்பாவு, | சேலம் | 15—0—0 |
| கே. சி. மன்னார், | ,, | 25—0—0 |
| ப. கொ. வரதய்யா, | ,, | 4—0—0 |
| கொ. சு. அருணாசலம், | ,, | 3—0—0 |
| எ. கே. செந்திரய்யா, | ,, | 3—0—0 |
| எ. எம். பானு, | ,, | 25—0—0 |
| ஓர் அனுதாபி, | ,, | 10—0—0 |
| ரொ. சு. முத்துசாமி, | ,, | 10—0—0 |
| ப. என். செந்திரய்யா, | ,, | 2—0—0 |
| எம். எஸ். அருணாசலம், | ,, | 2—8—0 |
| பி. கே. பெருமாள் | ,, | 2—8—0 |
| பி. குன்னுசாமி | ,, | 2—8—0 |
| ஜே. நடேசன் | ,, | 2—8—0 |
| பி. வி. இராசு | ,, | 2—8—0 |
| பி. சி. இராஜகோபால் | ,, | 5—0—0 |
| டி. வி. குருசாமி | ,, | 2—8—0 |
| கன்லபுலி அருணாசலம் | ,, | 2—0—0 |
| பே. ந. ரங்கசாமி | ,, | 2—0—0 |
| எம். ஜி. திருமால் | ,, | 2—0—0 |
| க. பெ. ஜ. குப்பம்மாள் | ,, | 2—0—0 |
| சொ. ச. கந்தசாமி | ,, | 1—0—0 |
| கி. தி. பிள்ளாரி | ,, | 2—0—0 |
| கூ. மு. முருகய்யா | ,, | 2—0—0 |
| பி. சின்னராஜுலு | ,, | 1—0—0 |
| கே. பி. கோவிந்தன் | ,, | 1—0—0 |
| பி. வி. தர்மையா | ,, | 1—0—0 |
| பி. வி. கந்தசாமி | ,, | 1—0—0 |
| பி. எம். ரங்கசாமி | ,, | 1—0—0 |
| பி. இராமசாமி | ,, | 2—8—0 |
| கே. வி. கந்தசாமி | ,, | 1—0—0 |
| எ. என். மருதாசலம் | ,, | 2—8—0 |
| எ. எஸ். முத்துசாமி | ,, | 2—0—0 |
| பி. பி. நடராசன் | ,, | 1—0—0 |
| எ. எஸ். சுப்ரமணியம் | ,, | 1—0—0 |
| திரு. கேளு | ,, | 1—0—0 |
| பி. வி. மாணிக்கம் | ,, | 2—0—0 |
| ஆர். வி. வேலாசாமி | ,, | 2—0—0 |
| எ. கே. பி. கிருஷ்ணன் | ,, | 1—0—0 |
| பி. எஸ். சின்னய்யன் | ,, | 2—0—0 |
| பி. வி. செல்வராஜ் | ,, | 1—0—0 |
| பி. சுசிலா | ,, | 1—0—0 |
| எம். எஸ். மருதாசலம் | ,, | 2—8—0 |
| எஸ். எஸ். சின்னப்பன் | ,, | 2—0—0 |
| பி. ஆர். ரங்கசாமி | ,, | 2—0—0 |
| எல். கே. பெருமாள் | ,, | 5—0—0 |
| எ. கே. வரதராஜுலு | ,, | 1—0—0 |
| எஸ். வி. மாணிக்கம் | ,, | 2—0—0 |
| கே. வி. குப்புசாமி | ,, | 2—0—0 |
| என். எம். பெத்தி | ,, | 2—0—0 |
| கே. டி. ஓபுளி | ,, | 2—0—0 |
| தொ. அ. சித்தையன் | ,, | 5—0—0 |
| எம். ஈ. செந்திரய்யா | ,, | 2—8—0 |
| எஸ். டி. ராஜவேல் | ,, | 1—0—0 |
| கே. ஏ. ஈஸ்வரி | ,, | 2—0—0 |
| மான. முத்தியால்சாமி | ,, | 1—0—0 |
| கந்தவிலாஸ் | ,, | 10—0—0 |
| க. மு. கந்தசாமி | ,, | 2—0—0 |
| எ. வி. அனந்தையா | ,, | 2—8—0 |
| எல். கே. அருணாசலம் | ,, | 2—0—0 |
| பி. வி. குப்புசாமி | ,, | 1—0—0 |
| கே. பெருமாள் | ,, | 2—0—0 |
| எம். பாலகிருஷ்ணன் | ,, | 2—0—0 |
| ஏ. சித்தய்யன் | ,, | 5—0—0 |
| லிங்கம். கோபால் | ,, | 3—0—0 |
| பி. வி. சுந்தரம் | ,, | 3—0—0 |
| பி. கே. ஜெகன்னாதன் | ,, | 2—0—0 |
| போகன வேலாசாமி | ,, | 4—0—0 |
| கே. எஸ். குப்புசாமி | ,, | 3—0—0 |
| பி. என். லிங்கசாமி | ,, | 2—0—0 |
| பி. கே. பத்பநாபன் | ,, | 2—0—0 |
| கண்லபுலி குப்புசாமி | ,, | 1—0—0 |
| பி. கே. ஜெயராம் | ,, | 1—0—0 |
| பி. அப்பாயி | ,, | 1—0—0 |
| கே. ஆர். அப்பாய் | ,, | 0—8—0 |
| சி. ரங்கசாமி | ,, | 1—0—0 |
| தொ. இராமசாமி | ,, | 0—6—9 |
| க. கந்தசாமி | ,, | 1—0—0 |
| பயின்டு இராசு | ,, | 1—0—0 |
| பி. கே. சுப்ரமணியம் | ,, | 0—8—0 |
| பி. வி. லிங்கிசாமி | ,, | 1—0—0 |

| | |
|---|---|
| என். ஆர். சுப்ரமணியம் ,, | 1—0—0 |
| போகன அப்பாயி ,, | 0—8—0 |
| பி. என். பெருமாள் ,, | 1—0—0 |
| பி. எஸ். ஜெகன்னுதன் ,, | 0—8—0 |
| என். வி. பத்ரயன் ,, | 0—4—1 |
| கே. வி. தியாகராசன் ,, | 0—4—0 |
| போகன சுப்ரமணியம் ,, | 0—4—0 |
| அங். குப்புசாமி ,, | 0—8—0 |
| பி. எல். வேலாசாமி ,, | 1—0—0 |
| கே. எம். கந்தசாமி ,, | 1—0—0 |
| சிந்தன கோபால் ,, | 0—8—0 |
| கூடமிடி சுப்ரமணியம் ,, | 1—0—0 |
| லிங்கம், வரதராசு ,, | 0—8—0 |
| கே. கே. மகாதேவன் ,, | 2—0—0 |
| கொசனம். ஈஸ்வரி ,, | 0—8—0 |
| தும்பேட்டி அப்பாயி ,, | 0—8—0 |
| பி. என். குப்புச்சாமி ,, | 0—8—0 |
| சி. ஆர். சித்தய்யன் ,, | 1—0—0 |
| த. நடேசன் கொப்பாவளி கிராமம் | 2—0—0 |
| து. முத்துநாவு ,, | 1—0—0 |
| கு. சிங்காரம் ,, | 1—0—0 |
| சு. நடேசன் ,, | 1—0—0 |
| நா. நடேசன் ,, | 1—0—0 |
| இப்ராகீம் ,, | 1—0—0 |
| சி. கலியபெருமாள் ,, | 0—12—0 |
| க. சுந்தரம் ,, | 0—8—0 |
| நா. சுப்ரமணியம் ,, | 0—8—0 |
| நா. மாரிமுத்து ,, | 0—8—0 |
| சு. தங்கவேல் ,, | 0—8—0 |
| மு. தங்கவேல் ,, | 0—8—0 |
| து. பிச்சை ,, | 0—8—0 |
| அ. பரமசிவம் ,, | 0—8—0 |
| அ. மருதமுத்து ,, | 0—4—0 |
| அ. கணேசன் ,, | 0—4—0 |
| க. மாணிக்கம் ,, | 0—4—0 |
| வை. பிச்சை ,, | 0—4—0 |
| கே. ஏ. நடேசன் ,, | 0—4—0 |
| ச. ரங்கன் ,, | 0—4—0 |
| சுல்தான் ,, | 0—4—0 |

திருவிதாங்கூர் திராவிடர்: வடசை அர்ச்சுனன் நினைவு மன்றச் சார்பாக நாலணு அளித்தவர்கள்:- டி. ஐ. ராசேந்திரன், எஸ். நடராசன், ஏ. சனர்த்தனம், எம். அந்தோனி, பி. முத்தய்யா, என் பட்டன், என். சங்கரநாராயணன். வி. பாபநாசம், எஸ். எம். இளந்திரையன், எஸ். இராமச்சந்திரன், ஆர். சுப்பய்யா, உ. உதுமான், எஸ். அய்யாவு, கே. குமாரசாமி, ஏ. சொக்கலிங்கம், எம். பச்சை, பி. அந்தோனி (காங்கிரஸ்) பு. நடராசன், (காங்கிரஸ்) கே. நயினர், சு. பு. இராமச்சந்திரன், அ. மணிமொழி, கே. ஆறுமுகம், வி. சதானந்தம், கே. முத்துச்சாமி. 6—0—0

மேற்படியூர்: இரண்டணுதந்தவர்கள்:- ஆ. நயினர், சு. சண்முகம். பாலையா, எல். சொக்கலிங்கம், எஸ். சோமசுந்தரம், ஏ. நாராயணன், எம். கிருஷ்ணன், பு. கணேசன், ச. இராசேந்திரன், கே. வி. பிள்ளை, கே. ஜி. கிருஷ்ணன், எம். கிருஷ்ணன், எம். கணபதி, சிவ. சுப்ரமணியன், இராம சுப்ரமணியம், என். இலக்குமணப்பெருமாள், எஸ். தாணுலிங்கம், ஈ. சுப்பய்யா, பி. குமரேசன். டி. செல்லப்பா, கே. பகவதி, தா. பூதலிங்கம், வே. கோபிநாதன், அ. செல்லப்பா, கு. திருநீலகண்டன், ரா. ஆறுமுகப்பெருமாள், டி. அருணசலம், ஏ. சந்தியா, ஏ. பூதலிங்கம், அ. இளம்பரிதி, டி. இராமச்சந்திரன், எம். ஆறுமுகம், எஸ். வேலாயுதம், டி. நல்லபெருமாள், எம். சுப்ரமணியம், எஸ். சொக்கலிங்கம், எஸ். குமரேசன் 4—10—0

| | |
|---|---|
| திராவிடர் பெடரேஷன், குகை, சேலம் | 50—0—0 |
| மு. துரைபாண்டியன், புதியம்புதூர் | 0—8—0 |
| எஸ். என். குருசாமி, விருதுநகர் | 0—8—0 |
| எம். கணேசன், இனங்குடி | 1—0—0 |
| எம். சத்தியமூர்த்தி ,, | 2—0—0 |
| பி. பாலசந்திரன் ,, | 1—0—0 |

ஆதிப்பட்டி எஸ். செந்தில்வேல் மூலம் எட்டணு அனுப்பியவர்கள்:- எஸ். செந்தில்வேல், எஸ். கே. சாமுவேல், கா. சங்கரன், ச. சங்கரசுப்பு, ஆ. சரவணப்பெருமாள், சு. சங்கர பாண்டியன் 3—0—0

மேற்படியார் மூலம் நாலணு அனுப்பியவர்கள்:- ஆ. சங்கரநாராயணன், அ. சு. கோட்டி, சு. கணபதி, ச. முத்தய்யா, ஆர். ஆறுமுகம், ஆர். பெருமாள், ப. கோமதிநாயகம், த. சு. அருணசலம், ஆ. முத்தய்யா, ச. கோட்டி. 2—8—0

| | |
|---|---|
| எம். கே. தியாகராச பாகவதர், சென்னை | 250—0—0 |
| எம். செல்லமுத்து, அரகளூர் | 0—8—0 |
| சி. எஸ். வெற்றிவேலு ஈழத்தூர் | 0—8—0 |
| ஆக மொத்தம் | 1046—3—5 |

12-ம் பக்கத் தொடர்ச்சி

வரியின் வால் நாளுக்கு நாள் நீண்டு நீண்டு ஏழைப் பொது மக்களைச் சுழற்றிசுழற்றி வீசியடிக்கிறது. வலி தாங்க முடியாமல் ஏழைகள் அழுகிருர்கள். கண்களிலிருந்து நீர் சிந்தத்தான் அவர்களுக்கு ஆற்றலிருக்கிறது; உள்ளக் குமுறலை எடுத்துப் பேச ஆற்றலில்லை. எடுத்துப் பேச முடியாத அந்த நிலை, மந்திரியார் மகிழ்ச்சியடைவதற்கேற்ற 'பழகிப்போன' நிலையாகக் கொள்ளப் படுகிறது. ஆனல், "அல்லலுற்று ஆற்ருது அழுத கண்ணீர் அரசாங்கத்தைத் தேய்க்கும் [illegible] மாறும்" என்பதை மட்டும் [illegible] கட்டத்தில் உணர்த்த [illegible] கிரோம்.

## மக்கள் பெருக்கம்

7-ம் பக்கத் தொடர்ச்சி

ணத்தில், சாரதாச் சட்டப்படி மண வயது குறிப்பிடப்பட்டிருந்தாலும், இதனை இன்னும் உயர்த்தவேண்டியது அவசியமாகும். இப்பொழுது ஓரளவிற்கு உயர்த்தியிருக்கிறார்கள் என்றாலும் அது போதாது. இளைஞர்கள் யாவரும், பெற்றோர்களின் நிர்ப்பந்தத்திற்காக இளமையில் மணம் செய்து கொள்வதை மறுக்க வேண்டும்.

மக்கள் பெருக்கத்தைத் தடுக்கக் கர்ப்பத் தடை (Birth Control) மற்றொரு இன்றியமையாத சாதனமாகும். இம்முறை இன்று அயல் நாடுகளிலே பெருவாரியாகக் கைக்கொள்ளப்படுகின்றது. ஆனால் நம் நாட்டிலே இம்முறை மதத்தின் பேரால் தடுக்கப்படுகிறது. ஆகையால்தான் மக்கள் முன்னேற்றத்திற்கு எல்லாத்துறைகளிலும் தடையாயுள்ள மதம், இந்நாட்டில் அழிக்கப்படவேண்டியது மிக மிக அவசியமாகிறது.

கர்ப்பத்தடையின் அவசியத்தை வற்புறுத்த முற்படும்போது, "It seems clear that those who de--nounce birth control there by —whether intentionally or not is immaterial—increase the possibilities of war" அதாவது, "கர்ப்பத்தடை முறையைக் கண்டிப்பவர்கள்வேண்டுமென்றே செய்தாலும் அல்லது வேறு காரணம்பற்றிச் செய்தாலும், எது எப்படியிருந்த போதிலும், போர் மூளுவதற்கான சாதனங்களைப் பெருக்குகிறார்கள் என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது." என்றுஅவ்வறிஞர் கூறுகின்றார். இக்கர்ப்பத்தடை முறையை நம் நாட்டுத் தட்பவெப்ப நிலைக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்வது நல்லதாகும்.

கல்வி அறிவு அதிகமுடைய பெண்களில் பெரும்பாலோர் ஆண்களின் மிருக உணர்ச்சிக்குப் பல முறை இணங்க மறுக்கின்றனர். ஆனால், பலர் "கல்லானாலும் கணவன்" என்ற அடிமைவாசகத்திற்குட்பட்டு ஆண்களின் மிருக உணர்ச்சிக்கு இணங்கித்தீரவேண்டியவர்களாகிறார்கள். இதனால்தான் பெண்களுக்கும் ஆண்களுக்கும் கர்ப்பத்தடைபற்றிய கல்வி போதிக்கப்படவேண்டியது அவசியமாகிறது. ஒரு சாதாரணக் குடும்பத் தலைவரைப் பார்த்து, நட்புமுறையிலே "என்ன இத்தனை குழந்தைகளைப் பராமரிப்பது கடினமாயிற்றே" என்று உட்பொருளுடன் கேட்டால், "ஆண்டவன் அருள்! அதற்கு நான் என்ன செய்யமுடியும்?" என்று வாய் வேதாந்தம் பேசுகின்றாரேயன்றி, எவ்வளவு தூரம் அது நாட்டையும், குடும்பங்களையும், பாதிக்கின்றதென்று அறிவதில்லை. படித்த திருக்கூட்டமே இப்பிரச்சினையைப் பற்றிச் சிந்திக்காத போது, பாமரர் எப்படிச் சிந்திக்க முற்படுவார்கள்?

ஒரு குடும்பத்தில், அளவுக்கு மீறிய குழந்தைகள் இருப்பதனால் தான் அவைகள் யாவும் சரிவரக்கவனிக்கப்படுவதில்லை. குழந்தைகள் யாவும் மெலிந்து, கிழிந்த அழுக்கடைந்த உடையுடன் உலவும் கோரக்காட்சியைத்தான் காண்கின்றோம்! "குறைவான நபர்கள்உள்ள குடும்பத்திற்கு அரசாங்கம் சலுகை காட்டும்" என்று அரசாங்கம் கூறினால், பலன் ஏற்படும் என்பது ஒரு சிலஆராய்ச்சியாளர்களின் முடிபு. மற்றொரு அறிஞர், "ஒவ்வொரு ஆணும் ஒருகுடும்பத்தை நிர்வகிக்கப்போதுமான வருவாய் அடைய வழிதேடும்வரையில் மணம் செய்து கொள்ளாதிருத்தல் நலம்" என்று கூறுகின்றார்.

"பல ஆழாக்குப்பால் குடிக்க வேண்டும்; பழவகைகள் உணவு உண்டபின் உண்ண வேண்டும்; வயிட்டமின்கள் (Vitamins) உள்ள கலப்புஉணவை (Balanced diet)யே உண்ணவேண்டும்" என்று விஞ்ஞானம் மக்களுக்குப் போதிக்கின்றது. ஆனால் ஒருகுடும்பத்தில் உள்ள 10, 12, பேரும் மேற் கூறிய வாறு உண்ணவேண்டுமானால் சாதாரண ஒருவருடைய வருவாய் எப்படிப் போதுமானதாகும்? ஆனால் குடும்பத்தில் மக்கள் எண்ணிக்கை குறைவாக இருந்தால், மேற்கூறிய முறையில் பாதியளவாவது உண்ணமுயற்சி செய்ய ஏதுவாகும். அவ்வாறு நல்ல ஆகாரத்தை உண்டால்தான் குழந்தைகள்முதல், பெரியவர்கள் ஈறாக யாவரும் உடல் வளத்தோடு உறுதியுடன் இன்பவாழ்வு வாழ்வார்கள். இதனை நடைமுறையில் கொண்டுவர முடியும், மக்கள் பெருக்கம் குறைந்தால். மக்கள் பெருக்கம்குறைய விஞ்ஞானம் புகட்டியுள்ள கர்ப்பத்தடைமுறைமக்களுக்குப்போதிக்கப்படவேண்டும். அறிஞர்களும், அரசாங்கங்களும் அக்கறை காட்டினால் ஓரளவுக்கு வெற்றியுண்டாக்க வழியேற்படும்.

●

6-ம் பக்கத் தொடர்ச்சி

தலையிலே வந்து விழுகின்றனவேயன்றி, உல்லாச புரியினரின் கோட்டைச் சுவரை உராய்ந்துகூடச் செல்வது கிடையாது. பணக்காரர்கள் மீது போடப்படுவதாகக் காட்டப்படும் சிலவரிகளும், அவர்களைக் கிஞ்சிற்றும் பாதிப்பதில்லை, ஏழைகளிடமே வசூலிக்கப்படுகின்றன. நேரிடையாகவும், மறைமுகமாகவும் வரிகள் எல்லாவற்றையும் செலுத்துவோர் ஏழை மக்களாகவே இருக்கிறார்கள். அப்படிப்பட்ட வரிகளைத்தான் 'காருண்யமிகுந்த காங்கிரஸ்' அரசாங்கம் விதிக்க ஆசைப்படுகிறது.

இந்த அரசாங்கத்திற்கு வரிகளைப் போடத்தான் தெரியுமே யொழிய, நல்லாட்சி நடத்தத் தெரியவில்லை என்று வருங்கால வரலாற்றாசிரியர்கள் எழுதியே தீருவர் என்று, சட்டசபையில் ஒரு அங்கத்தினர் முழக்கஞ் செய்துள்ளார்.

ரூபாய்க்கு அரைத் தம்படியாக விதிக்கப்பட்ட விற்பனைவரி, ஒரு தம்படியாகி, ஒன்று, இரண்டு தம்படியாகி, இரண்டு மூன்றாகி, இப்பொழுது மூன்று நாலரைத் தம்படியாகப் பரிணமித்து நிற்கிறது. 1939–40ல் விற்பனை வரியின் மூலம் கிடைத்த வருமானம் ரூ 33 இலட்சம். 1949–50ல் கிடைக்கும் வருமானம் ரூ 1302 இலட்சம். என்றாலும் அரசாங்கத்திற்குப் போதிய பணமில்லை!

குடிசைத் தொழிலபிவிருத்தி—கதர் அபிவிருத்தி — பிர்கா அபிவிருத்தி—தேசியமொழி அபிவிருத்தி போன்ற உருப்படாத—நியாயமற்ற திட்டங்களுக்குக் கோடிக்கணக்கான ரூபாய்களை வாரியிறைக்கும் அரசாங்கத்திடம், பிற நல்ல காரியங்களைச் செய்வதற்கு எப்படிப் பணம் கிடைக்க முடியும்!

(11-ம் பக்கம் பார்க்க)

# தூக்குமேடை அருகில் :: :: சாம்பசிவம்

[கே. முனுசாமி]

தற்கால அவசர சட்டத்தின்படி கைதியாகி, தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் தோழர் சாம்பசிவம் என்பவர் எனது சொந்த மருமகன், எனது உடன்பிறந்த அக்காள் மகன். நானும், எனது பெற்றோர்களும், சகோதர சகோதரிகளும் தென்ஆப்ரிக்காவில் டர்பன்பகுதியில் வாழ்ந்து வந்தோம். 1927-ம் ஆண்டு ஜூலை-மீ 27-உ நாங்கள் எல்லோரும் குடும்பத்துடன்குடியேறினோம். தற்சமயம் எனது குடும்பத்தார் சகலரும் சித்தியவான் பகுதியிலேயே வாழ்ந்து வருகிறோம். சாம்பசிவம், எனது சகோதரி சின்னம்மாளுக்கு டர்பனில் பிறந்த பிள்ளையாகும். மலேயாவுக்கு வரும் பொழுது சாம்பசிவத்திற்கு வயது 2. தற்சமயம் அவருக்கு சுமார் 24 வயதாகும்.

சாம்பசிவம் ஆரம்பத்தில் சித்தியவான் தமிழ்ப் பாடசாலையில் 5-வது வகுப்புவரை தமிழ்ப் படித்து 1940-ஆ முதல் 1942-ஆ மேமீ வரை ஷை தமிழ் பாடசாலையில் உதவி ஆசிரியராக வேலை செய்து வந்தார்; 1942-வருஷம் மத்தியில் வேலையைவிட்டுவிட்டுச் சிங்கப்பூருக்குத் தனது சகோதரி வீட்டிற்குச் சென்றார். இதுவரையும்எனது மேல் பார்வையிலேயே வளர்ந்து வந்தார்.

ஜப்பானியர் ஆட்சிக் காலத்தில் சிங்கப்பூரில் அவனது சகோதரியுடன் வாழ்ந்துவந்தார். யுத்தம் முடிந்த பிறகு, ஜோகூர் பாலோ என்னும் இடத்தில் தமிழ் உபாத்தியாயராகவும், இந்திய தொழிலாளர் சங்கத்தில் காரியதரிசியாகவும் இருந்துவந்தார். அவரது வாழ்க்கையின் முழு விவரங்களும் எனது குடும்பத்தாருக்கும் எனக்கும் தெரியாது. அவர் எனக்கு எழுதிய கடிதங்களிலிருந்தும் ஒருமுறை அவர் சித்தியவானுக்கு வந்து போனதிலிருந்தும் இவ்விஷயங்கள் தெரிய வந்தன. நாங்கள் அவர் இருப்பிடம் சென்று கவனித்ததில்லை. சில மாதங்களுக்கு முன்னால் சாம்பசிவம் கைதியாகி மூவார் ஆஸ்பத்திரியில் இருப்பதைக் கேள்விப்பட்டு எனது அக்காள் சென்று பார்த்து வந்தார்கள். பின்னர் அவர்மேல் கேஸ் நடந்தது. மரண தண்டனை விதிக்கப்பட்டிருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்தது. உடனே நான் எனது மாட்டையும் குடியிருக்கும் வீட்டையும் அடமானம் வைத்து, சிறிது பணம் சேர்த்துக்கொண்டு, கோலாலம்பூருக்குச் சென்று லாயர் ஈ. ஈ. வி. துரைசிங்கம் அவர்கள் மூலம் சாம்பசிவத்துக்காக அப்பீல் செய்தேன். அப்பீல் தள்ளுபடியாகி விட்டது. சாம்பசிவத்திற்கும் மரண தண்டனை நிச்சயிக்கப்பட்டது.

பின்னர் இந்தியா ஏஜெண்டு அவர்களுக்கும், திவி அவர்களுக்கும் கடிதமூலமாக சாம்பசிவம் விஷயங்களை அறிவித்தேன். இந்தியாவின் முதல் மந்திரி பண்டித ஜவஹர்லால் நேருவுக்குத் தந்திமூலமாகச் செய்தி யனுப்பியுள்ளேன். இவைகளே நான் செய்துள்ள உதவிகள். சாம்பசிவத்தின் தாயாரும் இரண்டு சகோதரர்களும் 6 சகோதரிகளும் மற்றும் உறவினர்களும் எனது குடும்பமும் மிகுந்த கவலையுடனும் வருத்தத்துடனும் இருந்து வருகிறோம். நாங்கள் செய்யவேண்டியகடமைகளைச்செய்துள்ளோம்.

*

## "திராவிடநாடு" இதழ்களுக்குத் தடை

24—4—49-ம் நாள் வெளிவந்த "திராவிடநாடு" இதழைச் சிங்கப்பூர் காலனியில் அச்சிடவோ, விற்கவோ விநியோகிக்கவோ, வழங்கவோ கூடாதென்று போலீஸ் கமிஷனர் தடுத்திருப்பதாக 27—5—49-ம் நாள் சிங்கப்பூர் கெஜட் அறிவிப்பொன்று கூறுகின்றது. அந்த இதழில் தோழர் கணபதியின் தூக்கு தண்டனை குறித்து, "தூக்குமேடை அழைக்கிறது!" என்று தலைப்பிட்டு எழுதப்பட்ட தலையங்கமே மேற்குறித்த தடையுத்திரவுக்குக் காரணம் என்று அறிவிக்கப்படுகிறது. தோழர் கணபதிக்குத் தூக்குதண்டனை நிறைவேற்றப்பட்டுவிட்டது குறித்து, 8—5—49-ம் நாள் இதழில் "கோவில்கறைபடிந்தது" என்ற கட்டுரை வெளிவந்ததற்காகவும், தோழர் சாம்பசிவம் தண்டனை குறித்து 15-5-49-ம் நாள் இதழில் "தூக்குமேடையில் மற்றுமொரு தமிழன்" என்ற கட்டுரை வெளிவந்ததற்காகவும், அவ்விரு இதழ்களையும் விற்பனை செய்யக்கூடாது என்று சிங்கப்பூர் அரசாங்கம் கட்டளை பிறப்பித்ததோடு, மேற்குறித்த இதழ்களையெல்லாம் பறிமுதல் செய்துவிட்டது.

"மூலபலம் முறிகிறது"

(அண்ணாதுரை எழுதிய புதியநூல்)

0—8—0

"இராம ராச்சியம்"

(கைவல்யம்)

0—10—0

மேற்கண்ட எமது இரு புதிய வெளியீடுகளையும் சென்னை, அறிவுப் பண்ணைக்குப் பூராவிற்பனையுரிமையோடு அளித்துவிட்டோம். தேவையுள்ளோர் (வியாபாரிகள் உட்பட) அவர்கட்கே எழுதவும்.

பரிமளம் பதிப்பகத்தார்,
காஞ்சிபுரம்.

புத்தகங்கள் கிடைக்கும் இடம்:—

அறிவுப்பண்ணை,
6, மங்கம்மாள்தெரு, எழும்பூர்,
சென்னை—1.

# விக்டர் யூகோவின் காதல்

பிரான்சு நாட்டு ஆசிரியர் விக்டர் யூகோவை அறியாதார் மிகச் சிலர்தான் இருக்கமுடியும். விக்டர் யூகோ எழுதியுள்ள "நிர்ப்பாக்கியர்கள்" (லமிஸராபிள்ஸ்) என்ற நவீனம் உலகத்திலுள்ள எல்லா மொழிகளிலும் மொழி பெயர்க்கப் பெற்றுள்ளது. பிரஞ்சு மொழியில், விக்டர் யூகோவைப் போன்று அரிய கற்பனைக் கதைகளை வெளியிட்டவர்கள் மிகவும் குறைவு. விக்டர் யூகோவைப் பிரான்சு தேசத்தார்களும், மற்றய எல்லா தேசத்தினர்களுமே ஓர் ஒப்பற்ற மேதாவியாகவே மதிக்கிறார்கள். இவர் நூல்களைப் படித்தவர்கள், இதனை ஒப்புவதற்குப் பின்வாங்க மாட்டார்கள். உலகம் போற்றிய இப்பேராசிரியர் ஒருமனோதத்துவவிற்பனர், மாபெருங் கவி! தன்னிளமையில் வறுமையினையே அநுபவித்தார். இவரது 18ம் ஆண்டு வரைக்கும் இவருக்கு முழுச்சாப்பாடு என்பது இன்னதென்று தெரியாது. கொடிய வறுமைப் பிணியில் சிக்குண்டிருந்தாரெனினும், அவ்வறுமை இவரது மூளைத்திறத்தை மிகுத்ததேயன்றிக் குறைக்கவில்லை. வறுமை அவரது அறிவிற்குச் சாணைக்கற் போன்று உதவி வந்ததே தவிர வேறன்று.

### விக்டர் யூகோவின் மணம்

விக்டர் யூகோ எவ்வளவு பெரிய மேதாவியாய் இருப்பினும், காதல் என்னும் உள்ளுறை உணர்ச்சிக்குத் தப்பியவரல்லர். தன்னிளம் வயதிலே அடிலிபோச்சர் என்னும் ஓர் சிறுமி மீது அன்பு பாராட்டி வந்தார். குழந்தைப் பருவம் தாண்டி வயது வளர வளர அன்பு காதலாய் முற்றியது. அடிலி போச்சர்மீது வைத்த அன்பு, விக்டர் யூகோ போச்சரை மணம் புரியும்வரையில், வேறுமாதர்களை ஏறிட்டும் நோக்கவில்லை. போச்சர் என்பவள் தன்னிடம் எவ்வாறு தூயஉடம்போடு, தூயமனத்தோடு, மனைவியாக வருதல் வேண்டுமென விக்டர்யூகோ கருதினாரோ, அவ்வாறே தானும் மணநாளன்று யூகோவிடம் மாசற்ற மனமோடும், உடலோடும் பழகுதல் கடனெனக் கருதி, வாழ்ந்து வந்தார் போச்சர். உலகம் போற்றும் விக்டர் யூகோவைப் போல் புகழ் வாய்ந்த ருஷியாதேசத்து ஆசிரியர் டால்ஸ்டாயின் வாழ்க்கைக்கும், விக்டர் யூகோவின் வாழ்க்கைக்கும் இந்தஒரு முறையில் மிகவும் நேர்மாறானவேறுபாடு காணப்படுகின்றது. டால்ஸ்டாய் ஆசிரியர் இளமையில் காமாதுரராய் சிற்றின்பத்தில் திளைத்து, முதுமையில் ஆண்கட்கும் கற்புளதென்ற கொள்கையை முன்னிறுத்தி வரைந்திருக்கின்றார். ஆனால், விக்டர் யூகோ இளமையிலேயே ஆண் கற்பைக் காப்பாற்றி வந்திருக்கின்றார்.

விக்டர் யூகோ தன் இளமையில் எழுதி வந்த பற்பல காவியங்களிலும், இயல் நூல்களிலும், தன் வறுமையைப் பற்றியும், போச்சர் மீதுற்றக் காதற் சிறப்பைப் பற்றியும் மறைவாக எழுதியுள்ளார். போச்சர் மீது வைத்துள்ள காதலினால் ஏற்பட்ட மனோ நிலையில், விக்டர் யூகோ எழுதியுள்ள நூல்கள் எல்லாம் அவரின் உள்ளக் கிடக்கையை வெகுஎளிதில் துலக்குவனவாய் இருக்கின்றன. பெருங் கிளர்ச்சிகட்கு ஆதாரமாகிய காதல், வறுமை, தியாகம் முதலியனவின்றேல், அரும்பெரும் நூல்கள் பிறப்பது எப்படி?

போச்சரை மணம்புரியும்நாளன்று காலையிற் கூட, "எந்த ஒரு பெண் தன்னை மணக்கும் மணமகன் கற்புடையவனல்ல என்றறிந்திருந்தும் அவனைத் தன் கணவனாக ஏற்க உடன்படுகின்றாளோ, அந்தப்பெண் அருவெறுப்பிற்கிலக்கானவள்' என்று போச்சருக்கு விக்டர் யூகோ எழுதியிருக்கின்றார். இக்கடிதம் இவரது உயர்வான கற்பையே வலியுறுத்திக் காண்பிக்கின்றது. இத்தகைய ஆண்டகையை அடையும் போச்சரின் வாய்ப்பு போன்று, உலகத்தில் எத்தனை பெண்கட்கு ஏற்படக்கூடும்! போச்சரைக் கடைசியாக ஓர் நாள் விக்டர்யூகோ மணம்புரிந்தார்.

### யூகோவின் மண வாழ்க்கை

உலகத்தில் மணம் புரியுமுன்னர், மேலும் ஒருவர்க்கொருவர் காதல் கொண்டு மணம் புரியு முன்னர், காதலர் காதலிகள் தங்கள் மண வாழ்க்கையில அநுபவிக்கப் புகும் இன்பங்களையெல்லாம், எண்ணி அகமகிழ்வார்கள். மனக்கோட்டை கட்டுவார்கள். எல்லாவித இன்பங்களிலும் தாமடையப் புகும் இன்பமே சிறந்ததென மதித்திருப்பார்கள். ஆனால் அநேகமாய்க் கண்ணுக்கழகாய், மனதிற்குப் பார்வையில்இன்பத்தை விளைவிப்பதுவாய்ப், பழுத்துப் பல வித நிறங்களுடன் தொங்குகின்ற எட்டிக் கனியானது, கைக்ககப்பட்ட பின்பு, கசப்பது போன்றும், தாங்கள் எண்ணிய எண்ணங்கள் எல்லாம் வீண் கனவுகள் போன்றும் முடிவது போலவே மண வாழ்க்கையும் அநேக சம்பவங்களில் எட்டிக் கனியாகின்றன வென்பது பலரின் அநுபவம். ஆயினும், எட்டிக்கனியும் ஒரு உயர்தர வைத்தியப் பொருளாய், இருதயத்திற்கு உரனளிக்கும் உன்னதப் பொருளாய் உபயோகப்படுவது போலவே, மணங்களும் பிற்காலத்தில் சிற்சில நலன்களை யளிக்காமலிருப்பது கிடையாது. நாவிற்கு சுவை பயவாவிடினும், உடலுக்கு உரனளிக்கும் தன்மை எட்டிக் கனியில் உள்ளது போலவே, மண வாழ்க்கையின் முன்னர் எதிர்பார்த்த விஷயங்களெல்லாம் விழலாய்ப் போகின்றன வென்றாலும், உலக வாழ்க்கைக்குரிய பல புதிய விஷயங்களெல்லாம் மண வாழ்க்கையில் நேரிடுகின்றவாதலின், இதனை ஒரு துக்ககரமான சம்பவமென்று கருதுவது அறிவிற்குப் பொருத்தமாகாது. அது போலவே விக்டர் யூகோவின் காதல் மணமும் பின்னர்

எட்டிக்கனியாய் கசக்கலானது. விக்டர் யூகோவிற்கும் போச்சருக்கும் 4 குழந்தைகளும் பிறந்துவிட்டன. போச்சருக்கு விக்டர் யூகோவின் மீது கொண்டுள்ள காதலின் தீவிரம் வரவர மட்டுப் பட்டுக்கொண்டே வந்தது. ஒரு நாளில், யூகோவின் நெருங்கிய நண்பராகிய சேண்டு பியூ என்பவரின் மீது அக்காதல் வழி மாறிப் பாய ஆரம்பித்தது. சேண்டு பியூ என்வர்மீது விக்டர் யூகோ அளவு கடந்த அன்பை வைத்து வந்தார். எனினும், சேண்டு பியூ விக்டர் யூகோ மீது வைத்து வந்த நட்பைப் பார்க்கிலும், யூகோவின் மனைவி போச்சரின் மீது அதிகம் பாராட்டி வந்தார். இவ்வளவு கற்றறிந்த பெருந்தன்மையான யூகோவின் இல்லற சுகத்திற்கு, யூகோவின் பிரிய நண்பராகிய சேண்டுபியூவே கேடாக முளைக்கலானார். யூகோவிற்கும் தன் நண்பன் செய்தியும், தன் மனைவியின் மனமாறுட்டமும், தெற்றெனப் புலப்பட்டு விட்டது. யூகோ மிகவும் துக்கப்படலானார். சேண்டு பியூவைத் தன்னில்லத்திற்குவருவதால், தவறுதல் ஏற்படுமென்றும் தடுத்துப் பார்த்தார். நண்பனைத் தடை செய்யவும் மனமில்லாதவராய், மனைவியின் துரோகத்திற்கும் சகியாராய் மிக்க வருந்தினார். உலகத்தில் மனையாட்டியையும் நண்பனையும் தவிர வேறு ஒருவருக்குள்ள ஆதாரம் எது? இவ்விரண்டு சிறந்த துணைகளுமே தனக்குத் துரோகம் புரியத் துணிவுற்றமையை நினைந்து நினைந்து யூகோ உருகலானார். கவியாசிரியராயின் என்ன? நூலாசிரியராயின் என்ன? வீரனாயினென்ன? இடுக்கணிடைக் கலக்கப் படாமல் இருப்பவர் மிகவும் சிலரே; இன்றெனவும் கூறலாம். ஆதலின், யூகோவின் மனதில், தன் நண்பனும் மனைவியும் செய்யும் வஞ்சகமானது வாளிட்டறுத்தது; அவர் சித்திரவதையடையலானார்.

## நாடகமாது துருவோ

யூகோ இவ்வாறு சிந்தை கலங்கித் தியக்கமுற்றிருக்கும் காலையில், ஓர் அரிய சம்பவம் நிகழ்ந்தது. பாரிஸ் நகரத்திலேயே, மிகச் சிறந்த அழகினையுடைய துருவோ என்பவள் யூகோவிற்கு அறிமுகமானாள். துருவோ என்பவள் ஓர் நாடகப் பெண். அழகிற் சிறந்தவள். ஆசை நாயகர்கள் மிகுந்தவள். இளவயதில் வறுமை வாய்ப்பட்டிருந்து, கன்னிகா மாடத்தின் ஆதரவில் வளர்ந்து, தன்னழகுக்கும் பயிற்சிக்கும், அறிவிற்கும், கன்னிகா மாடத்தினும் நாடக மேடையே சிறந்ததெனத் துணிந்து, இறுதியாய் நாடகமேடையில் தொழில் செய்வாளாயினாள். இவள் பிரான்சு தேசத்தில் மிகுந்த செல்வத்தைப் படைத்த பல அறிவாளிகளை நெருங்கிப்பழகிநன்குஉணர்ந்தவள். மிக்கச்செல்வம் இவளிடம் தானாகச் சேர ஆரம்பித்தது என்பதில் என்ன சந்தேகம் உள்ளது. நாடகமேடைக்கு வந்ததும் துருவோவின் வறுமை பஞ்சாய்ப் பறந்து விட்டது. பல அறிவாளிகள், தனவந்தர்கள் இவர்கள் நட்பெல்லாம் கிட்டியது. உயர்ந்த சுகபோகங்களை அநுபவிக்கலாயினாள். பிரான்சு தேசமெங்கும் துருவோவின் புகழ் ஓங்கலாயிற்று. இந்நிலையிற்றான், துருவோ கவியாசிரியரும் இயலாசிரியருமான யூகோவைச் சந்தித்தாள். யூகோவைச் சந்தித்ததும், துருவோவிற்கு ஓர் புதிய உணர்ச்சி உண்டாயது. யூகோவும் துருவோவின்மீது காதல் கொண்டார். இருவர்களுடைய நட்பும் நாளுக்கு நாள் முற்றியது. துருவோவும் யூகோவும் வாழ்க்கைத் துணைவர்களாக வாழலானார்கள். ஏற்கனவே தன் கணவனைப் புறக்கணித்த போச்சருக்கு இப்போது யூகோவைக் குறைகூற வழியில்லை. துருவோவும் யூகோவின் மீது காதல் கொண்டதும், தனது வாழ்க்கையினையே மாற்றிவிட்டாள். நாடகப் பழக்கவழக்கங்கள் எல்லாம் எங்கேயோ ஓடிவிட்டன. சகல சுகபோகங்களும் யூகோவின் அன்பிற்கு ஒரு தூசி என்று மதிக்கலானாள். தனது கணவன் போலும், நண்பன் போலும் யூகோவைப் பாராட்டினாள். இத்தகைய உயர்ந்த காதலைக் கொண்ட துருவோ என்பவளை யூகோ எப்படித்தான் மறப்பார்?

யூகோ துருவோவைக் கைவிடவில்லை. துருவோவும் யூகோவின் சகல கஷ்ட நஷ்டங்களுக்கும் பொறுமையுடன்ஈடுபட்டுவந்தாள். பிரெஞ்சு தேச மக்கள் எல்லாம் இவ்விரு காதலர்களையும் பார்த்து வியந்தார்கள். துருவோவின் உண்மையினையும், நல்வாழ்வினையும், கற்பையும் கண்டு புகழ்ந்து புகழ்ந்து பேசினார்கள். விக்டர் யூகோவின் உயர்வான எண்ணங்களும் பெருந்தன்மையும் துருவோ என்னும் நாடக மாதைத் தம்முடைய நிலைமைக்கே உயர்த்திவிட்டது. "என் ஏழ்மையும், என் தரித்திர உடைகளும், உண்கலங்களும் உமதுபால் உள்ள காதலையே குறிக்கின்றனவாதலின், எனது செல்வமற்ற நிலைமை, உயர்ந்த செல்வத்தினும் உன்னதமாய் இருக்கின்றது" என்று துருவோ, யூகோவிற்கு வரைந்திருக்கின்றாள். யூகோவின் உயிருக்கே ஆபத்து நேர்ந்த காலத்தில், அரசாங்கத்தில் யூகோவைக் கொல்லும் படிக்கு உத்திரவு பிறந்திருந்த காலத்தில், யூகோவைப் போலீசார் அறியாதபடிக்குத் தன்னுயிரினும் மேலாகக் காப்பாற்றியவள் துருவோவே. "துருவோ இல்லையெனில் நான் பிழைத்திருப்பதரிது" என்று பின்னொரு காலத்தில், யூகோ எழுதியிருக்கிறார்.

## யூகோவின் இரு மனைவிகள்.

பேருக்குப் போச்சர் மனைவியாக இருந்தபோதிலும், யூகோவின் மனைவியிலும் ஆயிரமடங்கு அன்புடையவளாய் ஒழுகி வந்தவள் துருவோவே — துருவோவிற்குத் தனியாக ஒரு வீட்டை அமர்த்தியிருந்தார். துருவோவின் மீது போச்சருக்கும் பிரியமிருந்து வந்தது.

சிற்சில சமயங்களில், அதாவது போச்சர் துருவோவைத் தன்வீட்டிற்கழைத்தபொழுதெல்லாம், விக்டர் யூகோ மீது தான் வைத்துள்ள அன்பின்காரணமாக, துருவோ போச்சர் அழைப்பிற்கு இணங்கினாளில்லை. யூகோவைப் பலர் ஏளனம் புரியலாமென்றும், யூகோவின் இல்லறத்திற்கு வசை ஏற்படுமென்றும், துருவோ கருதினாள் போலும்!

துருவோ ஒரு சிறிய குடிசையில் வசித்துவந்தாள். இந்தக் குடிசையிற்றான் யூகோ நாள்தோறும் துருவோவைச் சந்திப்பது. பின்பொரு காலத்தில் போச்சர் நோய்வாய்ப் பட்டாள். நோய் நீடித்தமையின், துருவோ அடிக்கடி போச்சரைச் சென்று பார்த்து போச்சருக்கு உதவி புரிவது வழக்கம். பின்னர் போச்சர் இறந்துவிட்ட பின்பு, யூகோ துருவோவை மணம் புரிந்து கொண்டார். துருவோவும் தான்

(அடுத்த பக்கம் பார்க்க)

# சந்திரநாகூர் பேசுகிறது

★ ★ ★

சந்திரநாகூர்! ஒரு அழகிய சிறு நகரம்! கல்கத்தாவிலிருந்து 21 மைல் தொலைவில், ஹூக்ளி நதியின் மேல் கரையில் அமைந்துள்ளது. சென்ற சில நூற்றாண்டுகளாகப், பிரெஞ்சு அரசின் ஆதிக்கத்தின் கீழ்க், குடியேற்றநாட்டின் பகுதியாக இருந்து, இப்பொழுது இந்திய யூனியனோடு சேர்ந்துவாழ அது இசைவு தந்துள்ளது!

வங்கத்தில் பிரெஞ்சுக்காரர்கள் குடியேறியவிதமே, ஒரு திடீர் வாய்ப்பால் ஏற்பட்டதாகும் என்று, வரலாறு செப்புகிறது. 1674ம் ஆண்டில், பிரான்சு நாட்டு மன்னனுக்குச் சொந்தமான சில கப்பல்கள், வங்காள விரிகுடாவில் வந்துகொண்டிருக்கும் போது, ஒரு கப்பல், தவறான திசை நோக்கியடித்த காற்றினால் தள்ளப் பட்டுப், போகும் திசையறியாது திக்கு முக்காடிற்று. கீழ்க்கடற்கரைப் பகுதியை யறியாது திகைத்துக் கொண்டிருந்த பிரெஞ்சுக் கப்பலை, மூன்று டச்சுவியாபாரிகள் கண்டு, அதனைக் கைப்பற்றி, ஹூக்ளி நதிக்கரையிலிருந்த தம்பண்டகசாலையின் பக்கம் ஓட்டிக்கொண்டுபோய் நிறுத்தினர். டச்சு மாலுமிகள், கப்பலைக் கைப்பற்றியதற்கான பரிசையும், கப்பலில் கொள்ளையிடப்பட்ட பொருள்களின் பங்கையும் பெறக் காத்துக்கொண்டிருந்தனர். ஹூக்ளி நதிக்கரையிலிருந்த டச்சுப் பண்டகசாலைகள், கப்பலில் கிடைத்தப் பொருளைப் பெற்றுக்கொள்வதிலே மகிழ்ச்சியுற்றிருந்தன. பல தடவைகள் கேட்டுக்கொண்ட மன்னிப்புகளுக்குப் பிறகு, பிரெஞ்சுக் கப்பலை மட்டும், கட்டுக் காவலினின்றும் விடுவிக்க டச்சுக்காரர்கள் இசைந்தனர். பிரெஞ்சுக் கப்பலில் வந்த வியாபாரிகள், வங்கத்தில், எங்கு வேண்டுமானாலும், தங்களுக்கு ஏற்றவொரு இடத்தில் பண்டகசாலையை அமைத்துக்கொண்டு, வாணிகம் செய்யலாம் என்ற உரிமையும் வழங்கப் பெற்றது. அதன் பிறகு பிரெஞ்சு மாலுமிகள், 1674ம் ஆண்டில், ஹூக்ளி நதிக்கரையில் ஒரு சிறு பண்டகசாலையைக் கட்டிக் கொண்டார்கள். இப்பொழுது காட்சியளிக்கும் சந்திரநாகூருக்கு வடக்கே சிறிது தொலைவில்தான் அப்பண்டகசாலை அமைக்கப் பட்டது.

வங்கத்தில் வாணிகம்புரியமட்டும், ஏழுக்குக் குறையாத ஐரோப்பிய நாடுகள், தங்கள் தங்கள் குடியேறிகளை வங்கத்திற்கு அந்தக் காலத்தில் அனுப்பிவைத்திருக்கின்றன. அப்படி வந்தவர்கள் போர்த்துகீசியர், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள், பிரஷ்யர்கள், டேனியர்கள், பிலெமிஷ்காரர்கள் ஆகியோராவர். இவர்களெல்லாம் ஹூக்ளி நதிக்கரையிலும், மற்ற இடங்களிலும் தங்கள் தங்கள் பண்டகசாலைகளை அமைத்துக்கொண்டு வாணிகம் புரியத் தொடங்கினர்கள். வங்கத்தின் வரலாற்றை உருவாக்குவதில், இந்த நாட்டினரெல்லாம் தங்கள் தங்கள் பங்கைச் செய்துமுடித்துள்ளார்கள். போர்த்துகீஸ், டச்சு, டேனிஷ், பிரஷ்யர், பிலெமீஷ் ஆகியோரெல்லாம் ஆரம்ப நூற்றாண்டிலேயே வங்கத்தைவிட்டு வெளியேறி விட்டனர். 1947-ம் ஆண்டில் இந்தியா சுதந்திரநிலை எய்தியபிறகு, ஆங்கிலேயர் ஆதிக்கமும் மறைந்தது. எஞ்சியதாக, வங்கத்தில் சந்திரநாகூரில் மட்டும் கால் ஊன்றி நின்றுவந்த ஆதிக்கம் பிரெஞ்சுக்காரர்கள் ஆதிக்கமாகும். அந்த ஆதிக்கமும் மறைவதற்கான முறையில் சந்திரநாகூர் இப்பொழுது தீர்ப்பளித்துள்ளது.

வரலாற்றுமுறைப்படிபார்த்தால், சந்திரநாகூர் 1688ம் ஆண்டில்தான் உருப்பெற்று எழுந்தது. 1674ம் ஆண்டுக்கு இடையிலுள்ள காலத்தில், என்னவெல்லாம் நடந்தன என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ளக் கூடவில்லை. அப்பொழுதெல்லாம், பிரெஞ்சுக்காரர்கள் கிழக்கு வங்கத்திலுள்ள காஸிம் பஜார் என்ற இடத்தைத் தங்கள் தங்குமிடமாகக் கொண்டிருந்தார்கள் என்று அறியப்படுகிறது. சந்திரநாகூரில் ஒரு பண்டகசாலையை எழுப்பிக்கொள்ள, 1688-ம் ஆண்டில்தான் பிரெஞ்சுக்காரர்களுக்கு அவுரங்கசீப் அனுமதி

(3-ம் பக்கம் பார்க்க)

முன்பக்கத் தொடர்ச்சி

இறக்கும் வரைக்கும் யூகோவின் மீது வைத்துள்ள அன்பைச் சற்றும் இழந்தவளன்று. பிற்காலங்களில், யூகோ, பற்பல நாடக மாதர்களிடத்தும், விபசாரிகளிடத்தும் ஒருவித மாய்ப் பழகிவந்தார். என்றாலும், துருவோ யூகோவைக் குறை கூறினது கிடையாது. துருவோ யூகோவினிடம் 50-ஆண்டுகட்கு மேல் மனைவியிலும் அன்பு மிக்களாய் இருந்து, இறுதியில் இறந்து போனள். துருவோ இறந்த மறு ஆண்டில் யூகோவும் காலமானர்.

●

## சந்தாதாரர்களுக்கு

“திராவிட நாடு” சந்தாதாரர்கள், சந்தா சம்பந்தமாகக் கடிதம் எழுதும்போது சந்தா எண்ணைக் குறித்தெழுத வேண்டும். சந்தா எண் குறிப்பிடாத கடிதங்கள் கவனிக்கப் படமாட்டா. சந்தா முடியும் தேதி ஒவ்வொரு முகவரிக்கு அடியிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்துச் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளவும்.

மானேஜர்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street. Kancheepuram.